
# நோக்கு

பெப்ரவரி 07, 2024

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்



## சர்வதேச நீதிமன்றத்தின் ஆணையும் தமிழ்தேசிய அரசியல்வாதிகளின் பொய்களும்



விடுதலைப்புலிகள் இயக்கத்தில் வாரிசு அரசியல்:

## சார்ள்ஸ் அன்ரனியின் கதை



## சபேசன் சிதம்பரநாதன்: யாழ்ப்பாணத்தின் பெருமை!

இலங்கை டூ இங்கிலாந்து: ஒரு தொழில்நுட்ப வல்லுநரின் வெற்றிப் பயணம்

# உள்ளடக்கம்


**03** சர்வதேச நீதிமன்றத்தின் ஆணையும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளின் பொய்களும்

**05** யாழ் மாநகரசபையின் பார்க்கிங் கட்டணம்: விரக்தியில் மக்கள்

**08** விடுதலைப்புலிகள் இயக்கத்தில் வாரிசு அரசியல்: சார்ள்ஸ் அன்ரனியின் கதை

**15** சபேசன் சிதம்பரநாதன் யாழ்ப்பாணத்தின் பெருமை

**25** அன்ரன் மாஸ்டர் பேசுகிறார்

**36** காணாமல் போகப்போகும் யாழ்ப்பாண கிணறுகள்

**43** நானும் பிரபாகரனும்: ஒரு முன்னாள் போராளியின் மனக்குமுறல்

**47** மாத்தையாவின் கதை








# சர்வதேச நீதிமன்றத்தின் ஆணையும் தமிழ்தேசிய அரசியல்வாதிகளின் பொய்களும்

**எஸ். நவரத்னம்**

நன்றி
**ஜப்னா மொனிட்டர்**

தமிழில்:
**பா.ராஜா**

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதியன்று, காசாவில் நடந்துவரும் மோதல்கள் தொடர்பாக, நெதர்லாந்தின் டென் ஹாக் நகரில் அமைந்துள்ள பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court-ICC) ஒரு முக்கிய தீர்ப்பை வெளியிட்டது. இந்தத் தீர்ப்பில் காசாவில் நிலைமையின் தீவிரத்தை ஒப்புக் கொண்டிருந்தாலும், இஸ்ரேல் படைகளின் தாக்குதல்களை நிறுத்த உத்தரவிடவில்லை.

மாறாக, இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேசச் சட்டங்களை இஸ்ரேல் பின்பற்ற வேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச நீதிமன்றங்கள் மூலம் இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று காலத்துக்கு காலம் இலங்கை தமிழ் மக்களுக்கு எமது போலித் தமிழ் தேசிய அரசியல்வாதிகள் வாக்குறுதியளிப்பது எவ்வளவு தூரம் பொய்யானது என்பது இந்த தீர்ப்பு மூலம் நிரூபணமாகியுள்ளது. உள்நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வானது, அந்த நாட்டுக்குள்ளிருந்தே வர வேண்டும், சர்வதேச அமைப்புகளின் தலையீட்டின் மூலம் அதற்கான தீர்வு கிடைக்க முடியாது என்பதை இந்த தீர்ப்பு தெளிவாக வலியுறுத்துகிறது. குறிப்பாக, இலங்கையின் உள்நாட்டுப் இனப் பிரச்சினையின் பின்னணியில் இந்த விஷயமானது, மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

மனிதாபிமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்ற வெளிப்படையான நெருக்கடி இருந்தபோதிலும், இஸ்ரேல்– ஹமாஸ் பிரச்சினையில் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் நேரடியாகத் தலையிட தயக்கம் காட்டுவது, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.சி.சி. போன்ற சர்வதேச அமைப்புகளுக்கு பொதுமக்களின் உயிரிழப்புகளைத் தடுப்பதிலும், உள்பூசல்களைத் தீர்ப்பதிலும் உள்ள வரம்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுவ துடன் இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்துக்கு, சர்வதேச அரசியல் மற்றும் சட்டத்தின் உண்மைகளை தெளிவாக நினைவூட்டுகிறது.

பன்னாட்டு சட்ட வழிகளைப் பின்பற்றி, நீதியைப் பெற்றுத் தருவதாக நீண்ட காலமாக ஈழ தமிழ் மக்களுக்கு உறுதி யளித்து வரும் சில தமிழ் தேசியவாத அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் மீது இது இந்த தீர்ப்பு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், காஸா விவகாரத்தில் ஐ.சி.சி.யின் நிலைப்பாடு இதேபோன்ற சூழ்நிலைகளில் உள்ள மற்ற சமூகங்களுக்கு ஒரு மறைமுகச் செய்தியாக உள்ளது. பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உள்நாட்டு பேச்சு வார்த்தையே தீர்வு என்பதை இந்த தீர்ப்பு மறைமுகமாக சொல்லிச் சென்றுள்ளது. இலங்கைத் தமிழ்ச் சமூகம், நீதிக்காக சர்வதேச நீதிமன்றங்களை நம்பியிருப்பது, இந்த வெளிப்பாடுகளின்படி, மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

## யாழ் மாநகரசபையின் பார்க்கிங் கட்டணம்:

# விரக்தியில் மக்கள்!



**நமது நிருபர்**

யாழ்ப்பாணம் நகரின் பல்வேறு இடங்களில் இரு சக்கர வாகனங்களை நிறுத்து வதற்கு, யாழ் மாநகர சபை வாகன நிறுத்தக் கட்டணத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது யாழ்ப்பாண மக்கள் மற்றும் வெளியூர்வாசிகளுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ் நகர வீதிகளில் பொருள்களை வாங்குவதற்காக வரும் மக்கள் தங்களது மிதிவண்டி மற்றும் மோட்டார்

சைக்கிள்களை அப் பகுதியில் அரைமணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்துக்கு நிறுத்தி விட்டுச் செல்வர். இது வாடிக்கையாக நடைபெறும் செயல்தான். இவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்களின் உரிமையாளர்களிடம் அடையாளம் தெரியாத நபர்கள் வாகன நிறுத்தக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கோருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு நபர், பல்வேறு பொருள்களை வாங்குவதற்கு வெவ்வேறு கடைகளுக்கு செல்ல வேண்டுமெனில், அவர் பல முறை பல்வேறு இடங்களில் வாகனத்தை நிறுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அப்போது, ஒவ்வோர் இடத்திலும் வாகன நிறுத்தக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இது யாழ்மக்களுக்கு பெரும் சிரமத்தை அளிப்பதாக உள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் இந்தக் கட்டண வசூலிப்பாளர்களிடம், அதற்கான முறையான அடையாள அட்டை அல்லது அதிகாரப்பூர்வ அங்கீகாரக் கடிதம் இல்லை என்பதே இங்கே கவலைக்குரிய விஷயமாகும். கட்டண வசூலில் தெளிவில்லாத சூழல் நிலவும்போது, வசூலிக்கப்பட்ட நிதி சட்டப்பூர்வமாக எத்தகைய பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது, அதன் நிர்வாக நடைமுறை என்ன என்பது குறித்த கேள்விகள் எழுகின்றன.

யாழ்ப்பாண மாநகரசபை பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளின் மோசமான நிர்வாக திறமையைப் பிரதிபலிக்கும் வகையில், இந்தப் பிரச்சினையானது சமீபத்தில் தீவிரமடைந்துள்ளது. நல்லூர் திருவிழாவின் போது, நல்லை ஆதீனத்துக்கு அருகிலுள்ள ஒழுங்கையை, யாழ் மாநகரசபை தான்தோன்றித்தனமாக மூடியது. இதனால், கூட்ட நெரிசல் ஏற்பட்டது. பொதுமக்கள், பக்தர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாயினர்.

விலைவாசி உயர்வு மற்றும் சேவை வரி அதிகரிப்பால் ஏற்கெனவே பொதுமக்கள் பெரும் நிதிச் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சமயத்தில், வாகன நிறுத்தக் கட்டணம் போன்ற அடிப்படை நடவடிக்கைகளுக்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பது நியாயமற்றதாகவும், மக்களைச் சுரண்டும் செயலாகவும் பார்க்கப்படுகிறது. இச் செயலானது, ஏற்கெனவே போராடி வரும் உள்ளூர் மக்களை மேலும் துன்பத்துக்கு ஆளாக்குவது போல உள்ளது இந்த நடைமுறைகளுக்கான பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மை பற்றிய கவலைகள் அதிகரித்து வருகின்றன.




இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறுப்பு யாழ் மாநகர சபையின் ஆணையாளரிடமே உள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு இன்னும் உரிய தீர்வை யாழ் நகரசபை வழங்கவில்லை. இதனால், அத்தியாவசியப் பணிகளுக்காக கடை வீதிகளுக்கு வரும் உள்ளூர், வெளியூர்வாசிகள் செய்வதறியாமல், விரக்தியில் உள்ளனர்.

யாழ் மாநகர சபையின் செயல்களால் விரக்தியடைந்த யாழ்ப்பாணம் மக்களில் சிலர், நகைச்சுவையாக யாழ் நகர எல்லைகளில், நெடுஞ்சாலைப் பகுதிகளில் அமைக்கப்படும் சுங்கச் சாவடிகளைப் போல யாழ் மாநகர சபை அமைத்து, நுழைவுக் கட்டணம் வசூலிக்கலாம். இது வெளிப்படையானதாகவும் சீரானதாகவும் இருக்கும் என்று பரிந்துரைத்துள்ளனர்.



மூத்த மகன் சார்ள்ஸ் அன்ரனியுடன் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் - 2006 ஆம் ஆண்டுகளில்

# விடுதலைப்புலிகள் இயக்கத்தில் வாரிசு அரசியல்:
# சார்ள்ஸ் அன்ரனியின் கதை


**கே.எஸ். லட்சுமி**

மூலம்:
**ஜப்னா மொனிட்டர்**

தமிழில்:
**பா.ராஜா**


தமிழகத்தில் உள்ள சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் தமிழகத்தில் ஆட்சி செய்து வரும் தி.மு.க. (திராவிட முன்னேற்றக் கழகம்) இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு கடந்த ஜனவரி 21ஆம் திகதி மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில், மூத்த அரசியல்வாதியும்,தமிழக முன்னாள் முதல்வருமான காலஞ்சென்ற மு.கருணாநிதியின் கொள்ளுப்பேரன்



சார்ள்ஸ் அன்ரனி



வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மதிவதனி, அவரது மூத்த மகன் சார்ள்ஸ் அன்ரனியுடன். 1986-87 வாக்கில்.

இன்பநிதி கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்த நிகழ்வு பேசு பொருளானதுடன் தமிழகம், இலங்கையில் உள்ள மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தி.மு.க.வின் வாரிசு அரசியல் முறையை மையப்படுத்தி விவாதம் எழுந்துள்ளது.

மு.கருணாநிதி, அவரது மகன் மு.க.ஸ்டாலின், அடுத்து மு.க.ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலின், தொடர்ந்து தற்போது உதயநிதியின் மகன் இன்பநிதி வரையிலான வாரிசு அரசியல் முறையை அவர்கள் விமர்சிக்கின்றனர். இந்த விவகாரமானது, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் இதுகுறித்து காரசாரமான கருத்துகளைத் தெரிவித்து, விவாதித்து வருகின்றனர்.

இது சரியோ தவறோ, தி.மு.க.வைப் பொறுத்தவரையில், ஜனநாயக முறைப்படி பெயருக்கேனும் தேர்தல் மூலமாகவே தலைவர்கள் மற்றும் பிற பதவிகளுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், தமிழ் ஈழம் என்ற பெயரில் இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக தனி நாடு கோரி போராடிய எந்தவோர் அமைப்பும் ஜனநாயக ரீதியாக தலைவர்களைத் தேர்ந்தெடுத்ததுண்டா? குறிப்பாக, நான் அங்கம் வகித்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பில், எந்தக் காலத்திலும்




பிரபாகரனின் இளைய மகன் பாலசந்திரனின் முதலாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது (இடமிருந்து) சார்ள்ஸ் அன்ரனி, பிரபாகரன், பாலசந்திரன், மதிவதனி மற்றும் மகள் துவாரகா.

ஜனநாயகக் கோட்பாடுகளின் சாயல் கூட இருந்ததில்லை என்பதே உண்மை.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப் பின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன், தனது தலைமையிலான அமைப்பை விடுதலை அமைப்பு என்று கூறி வந்தார். ஆனால், தனக்குப் பிறகு, தனது மகன் சார்ள்ஸ் அன்ரனியை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராக்க வேண்டும் என்ற எண்ணத் திலும், அதற்கான செயல்பாடுகளிலும் அவர் ஈடுபட்டார். சார்ள்ஸ் அன்ரனி பிறந்த போதிலிருந்தே விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதியில் வளர்ந்தவர். ஆனால், அவர் மற்ற போராளிகளைப் போல, முறையான பயிற்சி பெற்றவரா? இல்லவே இல்லை என்று என்னால் ஆணித்தரமாகக் கூற முடியும். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு தனி நபரும், அவர் தானாக விரும்பி அமைப்பில் சேர்ந்தவராக இருந்தாலும், அல்லது வலுக்கட்டாயமாக அமைப்பில் சேர்க்கப்பட்டவராக இருந்தாலும் சரி அவருக்கு அடிப்படை ராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. ஆனால், சார்ள்ஸ் அன்ரனிக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.



பெற்றோர் பிரபாகரன்-மதிவதனியுடன் பிறந்த குழந்தையான சார்ள்ஸ் அன்ரனி.

போராளி ஒருவரை, தளபதி அல்லது பிற பொறுப்பு நிலைகள் போன்ற தலைமைப் பதவிகளுக்கு நியமிப்பதற்கு முன், அவரின் போர்த்திறன் மற்றும் துறையில் செயல்திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் பொறுப்புகளில் நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. கல்வியைப் பொறுத்த வரையில், சிலர் உயர் கல்வி படித்திருப்பர், அவர்களின் கல்விப் பின்னணியானது, சிறப்பாக இருக்கும் நிலையில், அவர்கள் நேரடியாக தலைமைப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருந்தாலும், இத்தகைய நபர்கள், தங்கள் நியமனத்துக்கு முன்னர் போர்ச் சூழல்களில் தங்கள் திறன்களை நிரூபிக்க வேண்டியது அவசியம்.

இந்த நிலையில், கணினிப் பிரிவு என்ற சிறப்புப் பிரிவை வேலுப்பிள்ளை பிரபாகரன் உருவாக்கினார். இந்தப் பிரிவின் தலைவராக அவர், தனது மகன் சார்ள்ஸ் அன்ரனியை எவ்விதத் தேர்வும் இன்றி நேரடியாக நியமித்தார். விடுதலைப் புலிகளின் இந்தப் பிரிவானது, மற்ற பிரிவுகளுடன் ஒப்பிடுகையில், அதிக வளங்களும் (நிதி ஆதாரம் உள்ளிட்டவை) அதிகாரமும் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கணினிப் பிரிவுத் தலைவராக சார்ள்ஸ்



(இடமிருந்து) மதிவதனி, துவாரகா, பிரபாகரன், குட்டி (பிரபாகரனின் கம்யூனிகேஷன் செட் ஆபரேட்டர்) மற்றும் சார்ள்ஸ் அன்ரனி.

அன்ரனி நியமிக்கப்பட்டது தொடர்பான சூழ்நிலைகள் தெளிவற்றதாகவே உள் ளன. மற்ற உறுப்பினர்களைப் போலல்லாமல், அவர் அடிப்படை பயிற்சி நெறிமுறைகளுக்கு உட்படவில்லை அல்லது எந்தவொரு போரில் பங்குப் பற்றிய அனுபவம், நிர்வாகம் தொடர் பான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனுபவமோ அவருக்கு இருந்திருக்க வில்லை. 2006 ஆம் ஆண்டின் முற்பகுதியில், கணினிப் பிரிவானது, அன்ரனிக்காகவே வெளிப்படையாக நிறுவப்பட்டது தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. அதன் பிறகு, இந்தப் புதிய பிரிவில், அவருக்கு குறிப்பிடத்தக்க பொறுப்புகள் மற்றும் நிதி ஆதாரங்கள் உள்ளிட்டவை அளிக்கப்பட்டன. இந்த முக்கியப் பொறுப்புக்கு அவர் நியமிக்கப் பட்டதற்கான காரணங்கள் மற்றும் அளவுகோல்கள் பற்றி கேள்வி எழுகிறது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப் பில் உள்ள கணினிப் பிரிவானது, தனியே, கணினி தொடர்பான நடவடிக் கைகளில் கவனம் செலுத்தும் ஒரு பிரிவு அல்ல. மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் களை (Improvised Explosive Device - IEDs) கிளைமோர்கள் (Claymores) மற்றும் பிற வெடிபொருள்கள் உள்ளிட்ட வற்றை தயாரிக்கும் பணிகளின் அந்தப் பிரிவு ஈடுபட்டது. ஆரம்பத்தில், இந்தப் பிரிவு தொழில்நுட்பப் பிரிவு என அழைக்கப்பட்டு பிரதீப் மாஸ்டரின் தலை மையின்கீழ் செயல்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பில், பிரதீப் மாஸ்டர் ஒரு சிறந்த, திறமையான போராளி. தொழில்நுட்ப அறிவில் மேதாவி. மற்றும் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளுக்குப் பொறுப்பாக இருந்தவர். இந்தியாவில், விடுதலைப் புலிகள் அமைப்பின் நான்காவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற பிரதீப் மாஸ்டர் தனது பதவிக்கு ஏற்ப சிறந்த அனுபவத்தைப் பெற்றிருந்தார். இருப்பினும், அவரது பணியில் வேண்டுமென்றே சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு, அவர் ஒதுக்கிவைக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக, சார்ள்ஸ் அன்ரனி, நியமிக்கப்பட்டார். இதனால் பிரதீப்

மாஸ்டரின் பொறுப்புப் பதவியானது, திடீரென முடிவுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து, சிறப்பாகச் செயல்பட்டு வந்த பிரதீப் மாஸ்டர், அனைத்து பணிகளிலிருந்தும் முற்றிலும் விலக்கி வைக்கப்பட்டார். அவர், விடுதலைப் புலிகளின் பாஷையில் பார்த்தால், அனைத்து பொறுப்புகளிலும் இருந்து நீக்கப்பட்டு, 'உறைந்த' (கசழணநஎ) நிலையில் வைக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் என்பதாலேயே சார்ள்ஸ் அன்ரனி கணினிப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்துக்குப் பிறகு, அவர் அமைப்புக்குள் உள்ள எந்தவொரு தளபதிக்கும் மரியாதை தருவதில்லை. ஒரு சர்வாதிகாரியைப் போல நடந்து கொண்டார். பிரபாகரனின் மகன் என்ற ஒரே காரணத்துக்காக சார்ள்ஸ் அன்ரனியின் செயல்பாடுகளை விமர்சிக்க, மற்ற புலிகளின் தளபதிகள் தயங்கினர். அமைப்புக்குள் சார்ள்ஸ் அன்ரனியின் பெயரைக் குறிப்பிடுவ தைக் கூட, அவர்கள் தவிர்த்தனர். இவரை மரியாதையுடன் 'தம்பி' என்று குறிப்பிட்டனர். இது பிரபாகரனைக் குறிக்க ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப் பட்ட சொல்லாகும். ஆனால், சார்ள்ஸ் அன்ரனி, எவருக்கும் எவ்வித மரியாதை யும் கொடுக்கவில்லை. மேலும், அனைத்து தளபதிகளையும் போராளி களையும் அவர் கிள்ளுக்கீரை போலவே நடத்தினார்.

கணணிப் பிரிவுக்கு பொறுப்பேற்ற பிறகு, சார்ள்ஸ் அன்ரனி, தனது சொந்தப் படைப் பிரிவை உருவாக்கினார். அப் பிரிவில் சுமார் 1,000 போராளிகள் இருந்தனர். அவர்களுக்கு மிக நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டன. ஒரு கட்டத்தில், புலிகளின் வளங்களில் சுமார் பாதியளவு சார்ள்ஸ் அன்ரனியின் கட்டுப்பாட்டில் இருந்தது. இருப்பினும், விடுதலைப் புலிகளின் உயர் பதவியில் இருந்தபோதிலும், சார்ள்ஸ/க்கு போரில் பங்கேற்ற அனுபவம் இல்லை. மேலும், அவர், தனது தலைமையின் கீழ் உள்ள போராளிகளையும் போருக்கு அனுப்புவதைத் தவிர்த்தார்.

ஒரு காலத்தில் பிரபாகரனின் தனிப்பட்ட மெய்க்காவலராகப் பணியாற்றிய வேலவன், பின்னர் இம்ரான் பாண்டியனின் படையணியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இவருக்கு சார்ள்ஸ் அன்ரனியை 12 அல்லது 13 வயதில் இருந்தே தெரியும். போரானது, தீவிரமாக நடைபெற்ற சமயத்தில், வேலவனின் படைப்பிரிவில் ஆள்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இப் பிரச்சினையைத் தீர்க்க, சார்ள்ஸ் அன்ரனியை தனிப்பட்ட முறையில் வேலவன் பலமுறை சந்தித்து, சார்ள்ஸின் படையணியில் இருந்த

போராளிகளை தந்து உதவுமாறு கோரியுள்ளார். இருந்தாலும், வேலவனின் கோரிக்கைகளுக்கு சார்ள்ஸ் செவி சாய்க்கவில்லை. அவரது கோரிக்கைகளை தொடர்ந்து நிராகரித்துள்ளார். இந்த சம்பவம் குறித்து வேலவன் என்னுடன் தனிப்பட்ட உரையாடலின்போது பகிர்ந்து கொண்டார். சார்ள்ஸின் நடத்தையால் ஏற்பட்ட கடும் ஏமாற்றத்தையும் மனவேதனையையும் என்னிடம் அவர் வெளிப்படுத்தினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் ராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர், அதாவது 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்த தேவிபுரம் யுத்தமானது, சார்ள்ஸ் அன்ரனி பங்குபெற்ற முதலாவது யுத்தமாகும். இந்த யுத்தத்துக்கு சொர்ணம் தலைமை வகித்தார். சார்ள்ஸ் அன்ரனி படைத் தளபதிகளில் ஒருவராகச் செயல்பட்டார். இந்த யுத்தத்தின்போது, சார்ள்ஸ் அன்ரனியும், அவரது படையினரும் 500-க்கும் மேற்பட்ட அதி நவீன துப்பாக்கிகளை களத்திலேயே விட்டுவிட்டு, கோழைத்தனமாக போர்க்களத்தை விட்டு தப்பியோடினர். இந்தச் சம்பவமானது, புலிகள் வட்டாரத்தில் கேலிக்குரிய விஷ யமாக பேசப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் எவரும் சார்ள்ஸ் அன்ரனியைப் பற்றி உயர்வாகப் பேசியதில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். அனுபவமில்லாத, மரியாதை தெரியாத, திறமையற்ற தனது மகனை, தனது அறிவிக்கப்படாத வாரிசாக நியமித்து, விடுதலைப் புலிகளின் ராணுவ பலத்தில், பாதியளவை அவரிடம் ஒப்படைத்தார் பிரபாகரன். இத்தகைய சூழலில், இப்படிப்பட்ட தலைவரைப் பின்பற்றும் நபர்கள் தி.மு.க.வை விமர்சிப்பது எப்படி நியாயம் என்ற கேள்வி நம்முன் எழுகிறது. தற்போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் வட்டாரங்களில், பிரபாகரனின் மகளாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும் துவாரகா என்பவர், அவர்களின் இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பார் என்று நம்புகின்றனர். அவர் உண்மையான துவாரகா இல்லை என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால், அப் பெண்ணை சம்பந்தப்படுத்தும் இத்தகைய செயலானது, பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத்தினரை துதிபாடும் செயல் அன்றி வேறென்ன..?

**குறிப்பு – இந்தக் கட்டுரையானது, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பில் முக்கியப் பங்காற்றிய முன்னாள் தலைவர்களுள் ஒருவரால் எழுதப்பட்டது. அவர் ஒரு புனைப்பெயரில் இக் கட்டுரையை வெளியிட முடிவு செய்தார்.**



# சபேசன் சிதம்பரநாதன்: யாழ்ப்பாணத்தின் பெருமை!

## இலங்கை ல இங்கிலாந்து: ஒரு தொழில்நுட்ப வல்லுநரின் வெற்றிப் பயணம்

### டாக்டர் சபேசன் சிதம்பரநாதனுடன் நேர்காணல்

**நமது சிறப்பு செய்தியாளர்**

மூலம்:
**ஜப்னா மொனிட்டர்**

தமிழில்:
**பா.ராஜா**

நவீன தொழில்நுட்பத்தை தொழில் துறைக்கு அறிமுகப்படுத்துவதில் முன்னிலை வகிப்பவர் டாக்டர் சபேசன் சிதம்பரநாதன். இங்கிலாந்தில், பல கோடி டாலர் மதிப்பிலான விற்பனை வருமானத்தைக் கொண்டுள்ள நிறுவனமான பெர்வாஸ்ஐடி (PervasID) என்ற நிறுவனத்தை நிறுவியவர், அதன் தலைவராகவும் உள்ளார். இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர். தொழில்நுட்ப உலகில் குறிப்பிடத்தக்கவர்.

தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில், டாக்டர் சபேசன் சிதம்பரநாதன் புதிய கண்டுபிடிப்புகளில் முன்னோடியானவர். சில்லறை விற்பனை துறை, சுகாதாரத் துறை, விமானப் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஆர்.டி.எல்.எஸ். (real-time location tracking system) என்ற புதிய தொழில்நுட்பத்தை இவர் கண்டுபிடித்துள்ளார். இது 100 சதவிகித பேட்டரி இல்லாத அமைப்பாகும். இது இவரது முக்கியமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

தொழில்நுட்பத் துறையில் இவரது சேவையைப் பாராட்டி, இங்கிலாந்து அரசாங்கம், அண்மையில் Officer of the Order of the British Empire (OBE) விருதை இவருக்கு வழங்கியுள்ளது. கிங்ஸ் 2024. புத்தாண்டு விருதுகள் பட்டியலில் இவர் இடம்பெற்றிருந்தது, இவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பு களுக்கு ஒரு சிறந்த சான்றாகும். 'சேர்' பட்டத்தைப் பெறுவதற்கான ஓர் படியாக இந்த விருது கருதப்படுகிறது.

இலங்கையில் கிளிநொச்சியில் உள்ள பளை என்ற சிறிய கிராமத்தில், கொடிய 1983 இனக் கலவரம் நடந்து ஓராண்டுக்குப் பிறகு அதாவது 1984 ஆம் ஆண்டு பிறந்தார் சபேசன். இவரது ஆரம்ப கால வாழ்க்கையானது, கடும் போர்ச் சூழலின் பின்னணியில் இருந்தது. பல்வேறு இன்னல்களுக்குப் பிறகு, இந்த உயரிய இடத்தை அவர் அடைந்துள்ளார். போர் மேகம் சூழ்ந்தி ருந்த இலங்கையில் பிறந்த ஒரு சிறுவன், உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பத் துறை தலைவராக உயர்ந்துள்ளார். இதற்கு காரணம், அவர் கற்றுத் தேர்ந்த கல்விதான் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. கல்வியால் சாதிக்கலாம் என்பதற்கு, டாக்டர் சபேசன் ஓர் எடுத்துக்காட்டு.

பெர்வாஸ்ஐடி நிறுவனம் வளர்ச்சிய டைந்து வரும் நிலையில், அதனுடன் இணைந்து, டாக்டர் சபேசன் தொழில் துறையை முன்னேற்றும் வகையில், பல்வேறு தளங்களில் உரையாற்றி வருகிறார். அவர், 2022-ல் கேம்பிரிட்ஜில் உள்ள கிர்டன் கல்லூரியில் எண்டர்பிரைஸ் / பெல்லோவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாணவர்களிடையே, சிறந்த தொழில் முனைவோரைக் கண்டறிய, அவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட தயாரிப்புகளை வணிகப்படுத்தத் தேவை யான முக்கிய திறன்களை வளர்ப்பதில் டாக்டர் சபேசன் ஆர்வம் காட்டி வருகிறார். அவர், இங்கிலாந்து மற்றும் அவரது சொந்த நாடான இலங்கையில் உள்ள பள்ளிகளில் ஸ்டெம் (STEM) கல்விக்கான தூதுவராகவும் உள்ளார்.

டாக்டர் சபேசன் பல விருதுகளைப் பெற்றுள்ளார். ராயல் அகாதெமி ஆஃப் இஞ்ஜினீயரிங் தொழில்முனைவோர் விருது, ராயல் அகாதெமி ஆஃப் இஞ்ஜினீயரிங் யங் இஞ்ஜினீயர் ஆஃப் தி இயர் மற்றும் வெள்ளிப் பதக்கம், தி யு.கே. ஐசிடி பயோனீர் ஆஃப் கனெக்டட் வேர்ல்ட் விருது உள்ளிட்டவை இவற்றில் அடங்கும். சர் ஜார்ஜ் மக்ஃபர்லேன் பதக்கம் மற்றும் வர்த்தகத் துறையில் புதுமையான கண்டுபிடிப்புகளுக்காக குயின்ஸ் விருது ஆகியவற்றையும் டாக்டர் சபேசன் பெற்றுள்ளார். மேலும், அவர் 2023 ஆம் ஆண்டு பிசினஸ் எலெட்டின் "40 under 40" இல் இடம்பெற்றுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் தொடங்கி, இங்கிலாந்தில் பெயரும், புகழுடன் வாழும் டாக்டர் சபேசன் சிதம்பரநாதனைப் பற்றி இங்கே விரிவாகத் தெரிந்து கொள்வோம். ஜப்னா மொனிட்டருக்கு அவர் அளித்த சிறப்பு நேர்காணல் இதோ :




**சமீபத்தில் ஓ.பி.இ. விருது (OBE Award) பெற்றுள்ளீர்கள். இந்த விருதைப் பெற்ற பிறகு உங்கள் மனநிலை எப்படி உள்ளது? ஓ.பி.இ. விருது எதற்காக வழங்கப்படுகிறது, அதன் முக்கியத்துவம் என்ன என்பது பற்றி எங்கள் வாசகர்களுக்கு முழுமையாகத் தெரியாது. இது குறித்து விளக்க முடியுமா?**

ஓ.பி.இ. அல்லது ஆபிஸர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் விருதைப் பெற்றுள்ள இந்தத் தருணத்தை மிகவும் மதிப்புமிக்க தருணமாகக் கருதுகிறேன். இதை தனிப்பட்ட நபரின் உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகக் கருத முடியாது, கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். பெர்வாஸ்ஐடி நிறுவனக் குழுவினரின் கடுமையான உழைப்புக்கும் புதுமையான கண்டுபிடிப்புக்கும் கிடைத்த விருது இது. இந்த விருதானது, இங்கிலாந்து அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில், பிரிட்டிஷ் மன்னர், கலை, அறிவியல், தொண்டுப் பணி, சமூகப் பணி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தனி நபர்களை அங்கீகரித்து, இந்த விருதுக்குப் பரிந்துரைக்கிறார். வயர்லெஸ் தொழில்நுட்பத் துறையில், எனது சிறந்த பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. முக்கியமாக, கல்வித் துறையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (ஸ்டெம்-STEM) ஆகிய படிப்புகளை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்ததற்காகவும் இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

கல்வித் துறையில் நான் சிறந்த சேவை யாற்றியதற்காகவும், இத் துறையில் பெண்களின் பங்களிப்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததற்காகவும், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டதற்காகவும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஓ.பி.இ. விருதைப் பெறுவது என்பது, வெறும் பாராட்டுதலுக்கு அப்பாற்பட்டது. இது மிகுந்த பொறுப்பு ணர்வைக் கொண்டுள்ளது. சமூக முன்னேற்றத்துக்கான எனது நோக்கத் தைத் தொடர, இந்த விருது எனக்கு தூண்டுகோலாக அமையும். புதிய கண்டுபிடிப்புகளை அதிகளவில் மேற் கொள்ள எனக்கு உந்துதலாக இருக்கும். ஸ்டெம் கல்வியை மேம்படுத்துவதற்கான எனது உறுதிப்பாட்டை மேலும் வலுப் படுத்தும். தொழில்நுட்பத் துறையில் பன்முகத் தன்மையை வளர்க்க உதவும். அதிக அளவிலான கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள எதிர்காலச் சந்ததியின ருக்கு இத்தகைய விருது நல்ல வழிகாட்டியாக இருக்கும். மேலும், இளம் சமுதாயத்தினர் அவரவர் துறைகளிலும், சமூகத்தும் சிறந்த கண்டுபிடிப்புகளை வழங்கத் தூண்டுகோலாக இருக்கும்.

**நீங்கள் இன்று அடைந்த நிலைக்கு, உங்களது குழந்தைப் பருவம், வளர்ப்பு முறை எவ்வாறு உதவியாக இருந்தது?**

நான் ஒரு நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்து, வளர்ந்தேன். எனக்கு 10 வயது இருக்கும்போது, எனது தந்தை காலமாகி விட்டார். அப்போது என் வாழ்க்கையில் நான் முக்கியமான திருப்பத்தை எதிர்கொண்டேன். அப்போது, நாங்கள் பளையில் வசித்தோம். எனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு, அங்கிருந்து இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. என் அம்மம்மா மற்றும் பெரியம்மாவின் (அம்மாவின் மூத்த சகோதரி) உதவியுடன், சாவகச்சேரியில் குடியேறினோம். ஆரம்பத்திலிருந்தே எனது கல்விப் பயணமானது, சீராக இல்லை. நான் எனது ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோல்வியுற்றேன். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், எனது ஆரம்பப் பள்ளிப் பருவத்தில், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும், அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்பதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. ஆரம்பக் கல்வி பயின்ற போது, கிரிக்கெட் மற்றும் பிற விளையாட்டுகள் விளையாடுவதற்கே அதிக ஆர்வம் காட்டினேன். அதனால், புத்தக கல்வியைப் பொறுத்தவரையில்,என்னால் சிறந்த மாணவனாக விளங்க முடியவில்லை.

கணித மற்றும் விஞ்ஞான பாடங்களை நான் நன்றாகப் படித்தாலும், அந்தப் பாடங்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றாலும், பிற பாடங்களில்

எனது மதிப்பெண்கள் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. தர வரிசையைப் பொறுத்தவரையில், சக மாணவர்களுடன் ஒப்பிடும்போது, சராசரி நிலையிலேயே இருந்தது. அச் சமயத்தில், எனக்கு கிரிக்கெட் விளையாட்டின் மீதே அதிக ஆர்வம் இருந்தது. நான் கிரிக்கெட் விளையாடுவதற்காக, சில சமயங்களில் டியூஷன் வகுப்புகளைத் தவிர்த்துள்ளேன். அப்போது, கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றால், வெற்றி பெற்ற அணிக்கு டென்னிஸ் பந்து பரிசாகக் கிடைக்கும்.

நான் எட்டாம் வகுப்பு படித்தபோது, எனது குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலையை நன்கு உணர்ந்தேன். அது என் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இந்த உணர்வானது, எனது அன்றாட நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது. நான் மிகவும் நேசித்த கிரிக்கெட் விளையாட்டைக் கைவிட முடிவு செய்தேன். ஓய்வு நேரத்தில், நண்பர்களுடன் செலவிடுவதையும் தவிர்த்தேன். படிப்பில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினேன். எனது இந்த கடும் முயற்சியானது, அதிக மதிப்பெண்கள் பெற உதவியது. சாதாரண தரத் தேர்வுகளில் 8 பாடங்களுக்கு ஏ எடுத்தேன்.  ஆங்கிலப் பாடத்தில் மட்டும் எனக்கு எனக்கு “சி“ கிடைத்தது. ஆங்கிலம் எனக்கு சவாலாக விளங்கியது.  இந்தத் தேர்வுகளில், சிறந்த மதிப்பெண்கள் பெற்ற நிலையில், உயர் கல்விக்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்தேன். இங்கு கணிதத்தை முக்கியப் பாடமாகத் தேர்ந்தெடுத்தேன்.

இக்கட்டான தருணங்களில் எவ்வாறு செயல்படுவது (concept of crucible moments) என்பதைக் ஹார்வட் பல்கலைக் கழகத்தில் ஒரு பயிற்சி நெறியின் போது கற்றுக் கொண்டேன். வாழ்க்கையில் வெற்றியாளர்களாகத் திகழும் ஒபாமா முதல் ஸ்டீவ் ஜாப்ஸ் வரை இதுபோன்ற crucible moments தருணங்களை எதிர்கொண்டுள்ளனர். என்னைப் பொறுத்தவரையில், தந்தையின் இழப்பு மற்றும் அதைத் தொடர்ந்து, எனது குடும்பத்தில் இருந்த நிதிப் பிரச்சினைகள் எனது crucible moments ஆக இருந்தன. இவை எனது வளர்ச்சிப் பாதையை மாற்றியது.

சமுதாயத்தில் ஒரு சிறந்த மனிதராக இன்று தலைநிமிர்ந்து நிற்கிறீர்கள். சாவகச்சேரி இந்துக் கல்லூரி உங்களை எவ்வாறு செதுக்கியது? இக் கல்லூரியில் உங்களுக்கு கிடைத்த அனுபவங்கள், நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

தற்போது சமுதாயத்தில், தொழில் துறையில் இந்த உயர்ந்த நிலையை நான் எட்டி இருப்பதற்கு அடித்தளமிட்டது சாவகச்சேரி இந்துக் கல்லூரி தான்.

அந்தக் கல்லூரி என்னை நன்றாக செதுக்கியது எனலாம். அக் கல்லூ ரியில் பணிபுரிந்த ஆசிரியர்கள் எங்கள் (மாணவர்களின்) வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தனர். புத்தகக் கல்வியை கற்பிப்பதோடு மட்டுமல்லாமல், ஒழுக்கத்துடனும், நீதி தவறாமல் விளங்க வேண்டும் என்பதையும் எங்களுக்குக் கற்றுத் தந்தனர். சிறந்த நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

எனது வகுப்பு ஆசிரியர்களான ரவிக்குமார் மற்றும் நாகேஸ்வரன், விஞ்ஞான ஆசிரியர்கள் ராஜலிங்கம் மற்றும் பரமேஸ்வரன், கணித ஆசிரியர் அருட்ஜோதி வர்ணன், சமூகக் கல்விஃ வரலாறு பாட ஆசிரியர் சர்வேஸ்வரன் ஆகியோரை இங்கு நினைவு கூர்வதில் பெருமை கொள்கிறேன். அவர்களின் கண்டிப்பு மற்றும் கற்பிக்கும் முறைகள் மாணவர்களை ஈர்த்தன, பயனளித்தன. அக் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களிடம் நேர்மை, ஒழுக்கம், தார்மீகச் செயல்பாடு குறித்து எடுத்துக் கூறினர். அவர்கள் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டுமல்ல் அவர்கள் கற்பித்த நற்குணங்கள் மற்றும் போதனைகளுக்கு முன்மாதிரிகளாகவும், வாழும் உதாரணங்களாகவும் இருந்தனர். அவர்களின் போதனைகள் வாழ்நாள் முழுவதும் என்னுடன் தங்கி இருக்கும். உதாரணமாக, ஆசிரியர் நாகேஸ்வரன் எங்களுக்கு ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களை கற்றுக் கொடுத்தார். இந்த இதிகாசக் கதைகளைக் கூறும் போது, அவர் நிஜ வாழ்க்கையுடன் இணைத்து விளக்கமளித்தார். அது இன்றும் பசுமரத்தாணி போல மனதில் நிலைத்து நிற்கிறது. இவர் பண்டைய கதைகளுக்கும் சமகால வாழ்க்கைக்கும் உள்ள ஒத்த சம்பவங்களைக் கூறி, வகுப்பு நடத்தினார். இவற்றின் மூலம் நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். நான் அங்கு கற்றுக் கொண்ட நேர்மை, ஒற்றுமை மற்றும் தார்மீக வலிமை ஆகியவை எனது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன. அவை, இரு தளங்களிலும் எனக்குப் பயனுள்ளதாக உள்ளன.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரியில் கழித்த நாட்கள் – உங்கள் நினைவலைகள் மற்றும் அனுபவங்களைக் கூற முடியுமா?**

நான் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சாதாரண தரப் (முசனயையெசல டுநளநட) படிப்பை முடித்த பின், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு இரண்டு ஆண்டுகள் படித்தேன். கல்வி சார்ந்த எனது விருப்பங்களை வடிவமைப்பதில் இந்தக் காலகட்டம் முக்கியமானதாக இருந்தது. போட்டி



சாகவச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் விருது பெறும் மாணவரான இளம் சபேசன் சிதம்பரநாதன்




2000 ஆம் ஆண்டு துவக்கத்தில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், விருது பெறுகிறார் மாணவர் சபேசன் சிதம்பரநாதன் (இடது ஓரம்).

நிறைந்த சூழலை இக்காலகட்டம் எனக்கு உணர்த்தியது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், நான் உள்பட, அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள், 'சி' பிரிவு வகுப்பில் இடப்பட்டோம். சிறந்த மாணவர்களை ஒரே வகுப்பறையில் ஒன்று சேர்க்கும் இந்த உத்தியை நான் பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பார்த்தேன். இது மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதற்கான ஒரு நுட்பமாகும். மேலும், இத்தகைய நடவடிக்கை மாணவர்களிடையே ஆரோக்கியமான போட்டி உணர்வை வளர்க்க உதவும்.

கல்வியின் அவசியம், போட்டிகளை எதிர்கொள்ளும் கட்டாய சூழல் ஆகியவற்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எனக்கு கற்றுத் தந்தது. படிப்பில் கவனம் செலுத்துவதற்கான சூழல் இக் கல்லூரியில் நன்றாக இருந்தது. இக் கல்லூரியானது, அதிக மதிப்பெண்களைப் பெறுவதற்கு எனக்கு உந்துசக்தியாக இருந்தது. இருப்பினும், சிறந்த கல்வியறிவை மட்டும் பெற்றிருந்தால் போதாது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன் நல்ல பண்புகளையும் சம அளவில்

பெற்றிருக்க வேண்டும் என்பது எனது ஆணித்தரமான கருத்து. அதுபோல, போதிய கல்வியறிவைப் பெறாமல், நல்ல குணங்களை மட்டும் கொண்டிருப்பதும் போதாது.

எனது குணநலனை சிறப்பாகக் கட்டமைத்ததில், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முக்கியப் பங்கு உண்டு. அதுபோல, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எனது கல்வித் திறனை மெருகேற்றியது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி எனக்கு நல்ல இதயத்தைக் கொடுத்தது, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறந்த மூளையைக் கொடுத்தது என்று அடிக்கடி கூறிக் கொள்வேன். இந்த நல்ல குணம் மற்றும் சிறந்த அறிவுத் திறன் ஆகியவற்றின் கலவையானது, எனது ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு முக்கியமான காரணங்களாகும்.

## உயர்நிலைத் (Advanced Level) தேர்வுகளுக்காக தனிப் பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து படித்தீர்களா?

உயர்நிலைத் தேர்வுகளை எதிர்கொள்ள, நான் தனிப்பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றேன். பௌதீகவியல் பாடத்துக்கு, ஆசிரியர் குமரனிடமும் இராசயனவியல் பாடத்துக்கு ஆசிரியர் மணியம் மற்றும் ஆசிரியர் ராஜாராமிடமும் (அவர் காலமாகி விட்டார் என்பது வருத்தத்துக்குரியது) சென்று படித்தேன். கணிதம் கற்றுக்கொள்ள ஆசிரியர் செந்தில்ராஜிடம் சென்றேன். எனது உயர்நிலைக் கல்வியில் இந்த நான்கு ஆசிரியர்களும் முக்கியப் பங்கு வகித்தனர். ஒவ்வொரு ஆசிரியரும் அவரவர் பாடத்தை நான் நன்கு புரிந்துகொண்டு படிப்பதற்கு பெரிதும் உதவினர். அவரவர் பாடங்களில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கும் உதவியாக இருந்தனர்.

கணிதம் மற்றும் இயற்பியலில் எனக்கிருந்த ஆர்வம் மற்றும் திறமைகள், பின்னாளில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு எனக்கு உதவியாக இருந்தன. இந்தப் பாடங்களில் எனக்கு நன்கு அடித்தளமிட்ட ஆசிரியர்கள் குமரன் மற்றும் செந்தில்ராஜ் ஆகியோருக்கு என்றும் நான் நன்றிக்குரியவனாக இருப்பேன்.

## கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் எந்த நிலையில் படிப்பை முடித்தீர்கள் என்பதை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

இலங்கையில் எனது கல்வியை வெற்றிகரமாக முடித்த பின்னர், எனது கேம்பிரிட்ஜ் பயணம் தொடங்கியது. 2003 ஆம் ஆண்டில் உயர் நிலைத் தேர்வில் மூன்று பாடங்களிலும்



சிறந்த மதிப்பெண்கள் (3A) பெற்றேன். இதையடுத்து, நாட்டின் முதன்மையான பொறியியல் பல்கலைக்கழகமாக விளங்கும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன். பல்கலைக்கழகத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். அந்தப் பல்கலைக்கழகத்தில் நான் படித்தபோது, எனது விருப்பங்கள், லட்சியங்கள் ஆகியவை அதிகரித்தன. உலக அளவில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களான ஹார்வர்டு, கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு, எம்.ஐ.டி. மற்றும் ஸ்டான்போர்டு ஆகியவை பற்றி அறிந்திருந்த நிலையில், இவற்றில் ஏதாவது ஒன்றில் சேர வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். இதற்காக வாய்ப்புகளை நோக்கிக் காத்திருந்தேன். இங்கிலாந்தில் உள்ள சில பல்கலைக்கழகங்களில் சேருவதற்காக விண்ணப்பித்தேன். எனது சித்தியின் (அம்மாவின் தங்கை) குடும்பத்தினர் இங்கிலாந்தில் வசித்தனர். அவர்களின் உதவியுடன், இம் முயற்சியில் ஈடுபட்டேன்.

ஷெஃபீல்ட் பல்கலைக்கழகத்தில் ஸ்காலர்ஷிப் (கல்வி உதவித் தொகை) வசதியுடன் படிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதனால், மொரட்டுவ பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி, இங்கிலாந்துக்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன்.

**(54ஆம் பக்கம் பார்க்க...)**

# அன்ரன் மாஸ்டர் பேசுகிறார்

**விடுதலைப் புலிகளின் முன்னாள் ராணுவ அலுவலகத்தின் தலைவர் அன்ரன் மாஸ்டர். இவர் 'ஜப்னா மொனிட்டர்' ஆசிரியர் கணியன் பூங்குன்றனுடன் மேற்கொண்ட விரிவான உரையாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு.**

**பகுதி 02**



(இடமிருந்து) பத்மநாபா (ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்), பாலகுமார் (ஈராஸ்), பிரபாகரன் (எல்.டி.டி.இ.) மற்றும் சபாரத்னம் (டெலோ). சென்னையில் உள்ள பிரசிடென்ஸி ஹோட்டலில் சந்தித்துக் கொண்டபோது எடுத்த புகைப்படம்.


BY:
**Kaniyan Pungundran**
கணியன் பூங்குன்றன்

மொழிபெயர்ப்பு: **பா.ராஜா**


அன்ரன் மாஸ்டர் என்று அழைக்கப்படும் கே.டி. சிவகுமார், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியமான ஆரம்ப கால உறுப்பினர் மற்றும் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய கூட்டாளி. அவர், விடுதலைப் புலிகள் அமைப்பின் மத்தியக் குழுவின் உறுப்பினராகவும், ராணுவ அலுவலகத்தின் நிறுவனர் மற்றும் தலைவராக



1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி சென்னை பிரசிடென்ஸி ஹோட்டலில் எடுத்த புகைப்படம் : ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எ.ஃ.ப்.) தலைவர்கள்: சபாரத்னம் (டெலோ), பத்மநாபா (ஈ.பி.ஆர்.எல்.எ.ஃ.ப்.) மற்றும் பாலகுமார் (ஈராஸ்) ஆகியோர் பிரபாகரனுடன் (எல்.டி.டி.இ.). பபிரபாகரனின் உத்தரவின்பேரில், சபாரத்னம் மற்றும் பத்மநாபா ஆகியோர் கொல்லப்பட்டனர். பாலகுமார் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தனது (ஈராஸ்) இயக்கத்தை விட்டுவிலகி, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

**இருந்து, ராணுவத்தின் செயல்திறனை மேம்படுத்த குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினார். அவருடன் ஜப்னா மொனிட்டர் ஆசிரியர் நடத்திய உரையாடலின் இரண்டாம் பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சி, அடுத்துவரும் இதழ்களிலும் இடம்பெறும்.**

## 1983-க்குப் பின் தமிழ் போராளிக் குழுக்களின் வீறுகொண்ட எழுச்சி மற்றும் தலைமைகளின் பொறுப்பற்ற தன்மை

□ தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) □ ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம் (EROS) □ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) □ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) □ தமிழீழ விடுதலை இராணுவம் (TELA) □ தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) □ தமிழீழ இராணுவம் (TEA) □ புரட்சிகர ஈழ விடுதலை இயக்கம் (RELO) □ தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) □ தமிழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) □ தமிழீழ விடுதலை தீவிரவாதிகள் (TELE) □ தமிழீழ புரட்சி அமைப்பு (TERO) □ தமிழீழ விடுதலை கெரில்லாக்கள் (TELG) □ தமிழீழ செம்படை (RFTE) □ தமிழீழ தேசிய இராணுவம் (TENA) □ தமிழீழ பாதுகாப்பு படை (TEDF) □ தமிழீழ கொரில்லா இராணுவம் (GATE) □ இலங்கை விடுதலை தமிழ் இராணுவம் (IFTA) □ தமிழீழ புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவம் (TERPLA) □ கழுகு படை (EM) □ தமிழீழ விடுதலை நாகம் படை (TELC) □ தமிழீழ கொமாண்டோக்கள் (TEC) – உட்பட பல்வேறு இயக்கங்களும் தனி மனிதர்களும் 'தமிழீழம்' என்ற இலக்கிற்காக 'ஆயுதப் போரைத்' தொடங்கியிருந்தார்கள்.

1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த வன்முறையின் போதும், அதற்குப் பிறகும் செயல்பட்ட இலங்கையின் முக்கிய தமிழ் போராளி இயக்கங்கள்....

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்துக்கு பின்னர், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு (எல்.டி.டி.இ.), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் ஈழ விடுதலைக் கழகம் (டெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்.) உள்பட அனைத்து போராளி அமைப்புகளும் மற்றும் ஈழ புரட்சிகர மாணவர்களின் அமைப்பு (ஈராஸ்) ஆகியவை அதிவேக வளர்ச்சி அடைந்தன.

இந்தக் குழுக்கள், ஒரு சீரான முறையில் அல்லாமல், பொருத்தமற்ற வகையில், பெரிய அளவில் வளர்ச்சி பெற்றன. 'விரலுக்கேத்த வீக்கம்' என்ற தமிழ் சொற்றொடருக்கு மாறாக, இந்த அமைப்புகளின் வளர்ச்சியானது, சமாளிக்க முடியாத அளவுக்கு இருந்தது. இந்த இயக்கங்களில் ஏராளமானோர் இணைந்தனர். இதையடுத்து, இவற்றின் தலைவர்கள் விரைவில் கதாநாயக அந்தஸ்துப் பெற்றனர்.

எவ்வாறாயினும், 1983 கலவரத்துக்குப் பிறகு இந்த இயக்கங்களின் இணைந்தவர்களின் மனநிலையானது, பழிவாங்கும் நோக்கிலும், கோபம், குழப்பம் மற்றும் இந்திய ஆதரவு மற்றும் பயிற்சியின் மிகையான மதிப்பீடு ஆகியவற்றின் கலவையாக இருந்தது. இந்த இயக்கங்களில் இணைவது பெருமைக்குரிய விஷயமாக கருதப்பட்டது. ஆனால், இந்த இளைஞர்களுக்கு எதை நோக்கிச் செல்கிறோம் என்று தெரியவில்லை, ஆனால், கூட்டத்தின் அளவைப் பார்க்கும்போது நல்லவை நடக்கும் என்ற மனநிலை அல்லது கும்பலில் கோவிந்தா மனநிலை. அல்லது 'உற்சாகமாக கூட்டத்தைப் பின்தொடர்தல்' என்ற மனநிலை அவர்களுக்கு இருந்தது.

எதிர்த்துப் போராட வேண்டியது அவசியம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், எதிரி யார், யாரைக் குறி வைப்பது, யார் கூட்டாளிகள் என்பதில் நிச்சயமற்ற தன்மை நிலவியது. ஜெனீவா உடன்படிக்கைகள், போர்க் குற்றங்கள் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய பரந்த அறிவு ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம்.

1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரத்துக்கு முன்பு வரை, விடுதலைப் புலிகளும், இதர குழுக்களும் ஓப்பீட்டளவில் சிறியதாக எளிதில் கையாளக்கூடிய வகையில் இருந்தன. இதனால் அவர்கள் மேற்கொண்ட தவறுகளும் சிறியதாகவே இருந்தன.

1983 இனக் கலவரத்துக்குப் பிறகு, கணிசமான அளவில் இணைந்த தமிழ் இளைஞர்களை சரியான முறையில் வழிநடத்துவது இந்த இயக்கங்களின் தலைவர்களின் பொறுப்பாக இருந்தது.

ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்தக் குழுக்களின் தலைவர்கள் அனைவரும் இவ்வளவு பெரிய குழுவை திறம்பட வழிநடத்துவதற்கு திறனற்றவர்களாகவும் முதிர்ச்சியற்றவர்களாகவும் இருந்தனர்.

## பிரபாகரனின் இறுக்கம்: ஓர் இனத்தை மோதலுக்குத் தள்ளுவது

இலங்கையில் விடுதலைப் போராட்டமானது, இன்னும் நெகிழ்வாகவே இருந்திருக்க வேண்டும். வேலுப்பிள்ளை பிரபாகரன் செய்தது போல, 'ஈழம் அல்லது ஒன்றுமில்லை' என்ற மனோபாவத்துடன் விடுதலை இயக்கங்களை வழிநடத்துவது சாத்தியமில்லை. தமிழ் ஈழத்தைப் பெறும் இலக்கிலிருந்து மாற்றுக் கருத்தைக் கொண்டுள்ள எவரும் துரோகிகள் என பிரபாகரன் கருதினார். இது தவறான நிலைப்பாடு. இருப்பினும், அவர், தனது இலக்குகளில் உறுதியாக இருந்தார். அவரது நம்பிக்கைகள் மற்றும் சித்தாந்தங்களில் இருந்து சிறிதும் விலகவில்லை. பிரபாகரன், தனது போராட்டத்தின் தொடக்கம் முதல் இறக்கும் வரை அதே சித்தாந்தத்தைக் கடைப்பிடித்தார். விடுதலைக்காக ஓர் இனத்தையே தியாகம் செய்யலாம் என்ற அவரது மனநிலை பல்வேறு துயரங்களுக்கு வழிவகுத்தது எனலாம்.

பிரபாகரன் உண்மையிலேயே போரில் இறப்பதற்குத் தயாராகவே இருந்தார். ஆனால், அவருடன், ஒரு முழு இனத்தையும் மரணத்துக்கு இழுத்துச் செல்ல, அவருக்கு உரிமை கிடையாது. இது அவரது செயல்பாட்டில் உள்ள இமாலயத் தவறாகும். இருந்தபோதிலும், நான் இன்னும் பிரபாகரனை நேர்மையான மனிதராகவே பார்க்கிறேன். துரதிருஷ்டவசமாக, அவருக்கு ஆலோசனைகளை வழங்க, அனுபவமிக்க ஆலோசகர்கள் இல்லை அவரைச் சுற்றி இருந்த அனைவரும் ஆமாம் சாமி போடும், முகஸ்துதி காட்டும் ஆசாமிகளே. இன்னும் சொல்லப் போனால், அவர் யாருடைய ஆலோசனையையும் கேட்கும் மனநிலையிலும் இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

## பிரபாகரனின் தலைமை: தகுதியை மறைத்த முகஸ்துதி

பிரபாகரனைப் புகழ்ந்து பேசும் நபர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அமைப்பில் உயர் பதவிகளுக்குச் செல்லும் சூழ்நிலைகள் இருந்தன. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, அவர் பாராட்டுக்கும் விசுவாசத்துக்கும் எடுபடக் கூடியவர் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மேலும், தகுதி என்பது அவருக்கு இரண்டாம் பட்சம்தான்.

இதைப் பற்றி ஓர் உதாரணத்துடன் இங்கு விளக்குகிறேன்.



பூடான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற முதல் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் குழு : இடது புறத்தில் தமிழர் பிரதிநிதிகள், வலது புறத்தில் இலங்கை அரசுப் பிரதிநிதிகள்.

எனது ராணுவ அலுவலகத்தில் (எம்.ஓ.) எனக்குக் கீழே பணிபுரிந்தவர் லோறன்ஸ் திலகர். பிரான்ஸில் இருந்து வந்து, இந்த இயக்கத்தில் சேர்ந்தவர். இவர், சேலத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில், விடுதலைப் புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர். இவரைப் பற்றி நான் தெரிந்து கொண்ட விஷயம் என்னவென்றால், அவர், தீவிரவாத, பயங்கரவாத சித்தாந்தங்களையே அதிகம் கொண்டிருந்தார். இன விடுதலைக்கான தேசியவாதச் சிந்தனைகள் அவரிடம் இருக்கவில்லை என்பதே.

அச் சமயத்தில், எங்களது ராணுவ அலுவலகம் 'போர்க்குரல்' என்ற பெயரில் ஓர் இதழை வெளியிட்டது. இதை இதழ் என்று சொல்வதை விட, பாடநூல் என்று அழைப்பதே பொருத்தமானதாக இருக்கும். இந்த ராணுவப் பாடநூல்கள் அனைத்து விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்களிலும் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளுடன் நான் பணியாற்றிய காலத்தில், ஒன்பது "போர்க்குரல்' தொகுதிகள் வெளியிடப்பட்டன.

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக யூதர்கள் நடத்திய போராட்டத்தின்போது, 1947 ஆம் ஆண்டு, யூத பயங்கரவாதக் குழுவான 'இர்குன்' (ஐசபரெ), கிங் டேவிட் ஹோட்டலில் குண்டுவெடிப்புச் சம்பவத்தை நிகழ்த்தியது. இதுதொடர்பான கட்டுரையை இந்த இதழில் பிரசுரிக்குமாறு லாரன்ஸ் திலகர் பரிந்துரைத்தார். இதுதொடர்பான கட்டுரையை வெளியிடுவதற்கு நான் மறுப்புத் தெரிவித்தேன். மேலும், பயிற்சி முகாம்களில் உள்ள விடுதலைப்



(இடமிருந்து) லாரன்ஸ் திலகர், அன்ரன் பாலசிங்கம், வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் இந்திய உயர் அதிகாரி ஜே.என். தீட்சித்.

புலிகளைப் பயிற்றுவிப்பதற்கு இது பொருத்தமான வழி இல்லை என்றும் அவருக்கு விளக்கமளித்தேன்.

இதன் முதல் இதழில், விடுதலைப் புலிகளின் ராணுவ அலுவலகம் எத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும், நமது சித்தாந்தம், அதன் மூலம் நமது நோக்கங்களை எப்படி அடையத் திட்டமிடுகிறோம் என்பதை தெளிவாக விளக்கி தலையங்கம் எழுதினேன். அந்தத் தலையங்கத்தில், “பிரபாகரனின் தலைமையிலும் வழிகாட்டுதலின் கீழும் இந்த ராணுவ அலுவலகத்தை நடத்துகிறோம்“ என்று எழுதுமாறு லோறன்ஸ் திலகர் என்னைக் கேட்டுக் கொண்டார். ஆனால், நான் அவ்வாறு எழுதுவதற்கு மறுத்து விட்டேன்.


ராணுவ அலுவலகம் (எம்.ஓ.) என்பது கடின உழைப்பாளிகள் பலரின் கூட்டுப் பணியாகும் என்று அவரிடம் கூறினேன். குழு உணர்வை நாம்



லாரன்ஸ் திலகர்



பூடானில் உள்ள கூட்டரங்கின் முன் நடுநாயகமாக நிற்கிறார் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லாரன்ஸ் திலகர்.







பூடான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையை விளக்கும் கார்ட்டூன்.


இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவுடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் சமாதானத் தூதுக் குழு.

ஊக்குவிக்க வேண்டுமே தவிர தனி மனிதரை புகழ்பாடுவது அல்ல. இது தனி மனிதனின் செயல்பாடு அல்ல, குழு நடவடிக்கையாகும். எனவே, பிரபாகரனை பெரிதாகப் புகழ்ந்து பேச வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்தேன். பிரபாகரனின் அலுவலகமானது, ராணுவ அலுவலகத்தின் கீழ் வருகிறது. ஆனால், ராணுவ அலுவலகத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் அதற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. அதுதான் உண்மை.

ஆனால், பிரபாகரனிடம் லோறன்ஸ் திலகர் இதை தவறாகச் சொல்லியிருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். இந்த நிலையில், இதழ் அச்சிடப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு, பிரபாகரன் திடீரென என்னை அழைத்து, அரசியல் பணிக்காக மும்பையில் உள்ள ஒரு முக்கிய ஆதரவாளரைச் சந்திக்குமாறு கூறினார். அரசியல் பணிகளில் எனக்கு ஈடுபாடு இல்லை. நான் அரசியல் பணிகள் செய்தவன் அல்ல. இருந்தாலும், நான் மும்பைக்குச் சென்றேன். தேவையில்லாமல், இரண்டு நாட்களை மும்பையில் கழித்தேன்.

நான் சென்னை திரும்பியபோது, பாடநூல் ஏற்கெனவே அச்சிடப்பட்டிருந்தது. தலையங்கத்தில், லோறன்ஸ் திலகர்

கூறியது போலவே, பிரபாகரனின் தலைமைத்துவப் பண்பையும், ராணுவ அலுவலகத்தை நிர்வகிப்பதற்காக அவர் வழங்கும் யோசனைகளையும் பாராட்டும்படியான வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன.

1985 ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகள் உள்ளிட்ட போராளி அமைப்புகள் மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுக்கிடையே பூடான் நாட்டின் தலைநகர் திம்புவில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, என்னுடன், லோறன்ஸ் திலகரையும் பிரபாகரன் அனுப்பி வைத்திருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ள போராளிகளில் திலகர் மிகவும் இளையவர். அமைப்பில், அவரை விட மூத்த உறுப்பினர்கள் பலர் இருந்தனர். அச் சமயத்தில், அன்ரன் பாலசிங்கம், அரசியல் பிரிவுக்கு பொறுப்பாளராக இருந்தார். அவருடைய பிரிவில் பலர் இருந்தனர். ஆனால், பேச்சுவார்த்தைக்கு என்னுடன் லோறன்ஸ் திலகரை பிரபாகரன் அனுப்பினார். இதற்கு காரணம், திலகரின் துதி பாடும் தன்மையும், பிரபாகரனுடன் அவருக்கு இருந்த நெருக்கமும்தான்.

திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, திலகர் மேற்கொண்ட ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அனைத்து தமிழ்க் கட்சிகளும், “திம்புவில் மேற்கொள்ளப்பட்ட 4 கோட்பாடுகளை” ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தன. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த சமயத்தில், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் (டி.யூ.எல்.எஃப்.) அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பின் வரதராஜ பெருமாள் ஆகியோர் இலங்கைத் தூதுக் குழுவினருக்கு வரலாற்றை எடுத்துக் கூறி விவாதித்தனர். பேச்சுவார்த்தை நடைபெறாத சமயத்தில், திலகரை அவரது ஹோட்டல் அறையில் காண முடியவில்லை. பேச்சுவார்த்தையின் போது, திலகர், தமது கருத்துகளைத் தெரிவிப்பதற்குத் தேவையான விஷயத்தைப் பெற, வரதராஜ பெருமாளை தேடிச் சென்று, அவரிடம் பேச்சுவார்த்தை மேடையில் பேசுவதற்கான பேச்சை எழுதித்தருமாறு திலகர் கேட்டதை பற்றி பின்னர் அறிந்தேன்.

திலகரின் இந்த முட்டாள்தனமான செயல் தொடர்பாக கடுமையாக அவரை எச்சரித்த நான், அவரிடம், விடுதலைப் புலிகளை நாம் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதை அவருக்கு நினைவூட்டினேன். மேலும், அவர் மேற்கொண்ட செயலால், தன்னையும் விடுதலைப் புலிகளையும் அவர் இழிவுபடுத்துகிறார் என்று கூறினேன். இந்த சம்பவத்தை பிரபாகரனிடமோ அல்லது வேறு முக்கியத் தலைவர்களிடமோ நான் தெரிவிக்கவில்லை. அவ்வாறு

தெரிவித்திருந்தால், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவரது வாழ்க்கை அப்போதே பூஜியமாகி முடிந்து இருக்கும்.

முஸ்லிம் சமுதாயத்தினரின் மீது பிரபாகரனின் அளப்பரிய அன்புக்கு நானே சாட்சி. முஸ்லிம்களை நியாயமான முறையில் நடத்துவதன் முக்கியத்துவத்தையும், அவர்களின் உரிமைகளைப் பெறுவதை உறுதி செய்வதையும், அவர் எனக்கு எப்போதும் வலியுறுத்தினார். அவர் மிகவும் விரும்பிச் சாப்பிடும் ஹோட்டல்கள், முஸ்லிம் சமுதாயத்தினரால் நடத்தப்படும் ஹோட்டல்களாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் பகுதியில் மையப் பகுதியில் அமைந்துள்ள மொக்கன் கடை, அவர் அதிகம் விரும்பிச் சென்று சாப்பிடும் ஹோட்டலாகும். மற்றொரு விரும்பிச் செல்லும் ஹோட்டல் திருநெல்வேலி சந்தி பகுதியில், யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்துக்கு மிக அருகில் இருந்தது.

மாலை வேளையில், முதல் அல்லது இரண்டு காட்சியில் ஆங்கிலத் திரைப்படங்களைப் பார்த்துவிட்டு, கொத்து ரொட்டி சாப்பிடுவதற்காக அடிக்கடி அங்கு செல்வோம். எனினும், 1990 ஆம் ஆண்டு, நான் கனடாவில் இருந்தபோது, பிரபாகரனின் உத்தரவின்பேரில், யாழ்ப்பாணத்தில் வசித்துவந்த முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றி, அவர்களின் சொத்துகளைக் கைப்பற்றியதை அறிந்து அதிர்ச்சியுற்றேன்.


கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த, விடுதலைப் புலிகள் அமைப்பில் முக்கிய பிரமுகர்களாக விளங்கும் கருணா, கரிகாலன் போன்றோர் பிரபாகரனைச் சந்தித்து, அவரது மனதை மாற்றி, முஸ்லிம் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என்பதை பின்னாளில் அறிந்தேன்.

## போராளிகள் அனைவருக்கும் சம அளவில் மரியாதை

பிற விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் துரோகிகள் என முத்திரை குத்தப்படும் அதே வேளையில், விடுதலைப் புலிகளின் தியாகிகளை மாவீரர்களாகக் குறிப்பிடுவதை நான் உறுதியாக மறுக்கிறேன். ஈழத்தில் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடி, உயிர்த் தியாகம் செய்த ஒவ்வொரு தனி மனிதனும், அவர் எந்தவொரு இயக்கம் அல்லது அமைப்பு சார்ந்திருந்தாலும், அவர்கள் மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள். விடுதலைப் புலிகளை மட்டும் நினைவுகூரும் அதே வேளையில், மற்றவர்களைப் புறக்கணிக்கும் பழக்கம் நிறுத்தப்பட வேண்டும். தமிழர்கள் தங்களுக்குள் நல்லிணக்கத்தையும்

ஒற்றுமையையும் வளர்க்க வேண்டிய முக்கியமான தருணம் இது. அனைத்து போராளிகளையும் நினைவு கூருவது தமிழ் சமூகத்தின் முக்கியமான பொறுப்பாகும்.

பாரபட்சமும் இன்றி நினைவுகூரும் ஒரு கூட்டு அணுகுமுறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதில் எவ்விதப் பேச்சுவார்த்தையும் தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடு.



People should reject narrow mindset. All the Tamil youths who died for the Tamil causes should be respected equally regardless where they came from or which liberation movement they belonged. Rights and wrongs were done by all the parties involved in the struggle. Respect every single life gave lives from all sides.

குறுகிய மனப்பான்மையை மக்கள் நிராகரிக்க வேண்டும். தமிழ் இனத்துக்காக உயிர்நீத்த அனைத்து தமிழ் இளைஞர்களும், அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் அல்லது எந்த விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் சமமாக மதிக்கப்பட வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து தரப்பினராலும் நல்ல செயல்களும் மேற்கொள்ளப்பட்டன மற்றும் தவறுகளும் நிகழ்ந்துள்ளன. எல்லா பக்கங்களில் இருந்தும் உயிர்களைக் கொடுத்த ஒவ்வோர் உயிரையும் மதிக்க வேண்டும்.

ஆண்டுதோறும் விடுதலைப் புலிகளை மட்டும் நினைவுகூர்வதன் மூலமும், பிற இயக்கங்களைச் சேர்ந்தவர்களை துரோகிகள் என வகைப்படுத்துவதன் மூலமும், தமிழ் சமூகத்தினரிடையே உள்ள பிளவுகளையே நாம் ஆழப்படுத்துகிறோம். தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களை நீத்த அனைவரையும், அவர்களின் உறவுகளின் அடிப்படையில் எந்தவித

ஓராண்டுக்கு முன்பு எனது முகநூல் பக்கத்தில் வெவ்வேறு நபர்களின் வாழ்க்கையின் சமமற்ற மதிப்பீட்டைக் கவனித்தபோது, இந்த உணர்வை வெளிப்படுத்தினேன்.

தொடரும்...

# காணாமல் போகப்போகும் யாழ்ப்பாண கிணறுகள்!




திருநாவுக்கரசு தயந்தன்

இதை கேட்கும் போது வடிவேலுவின் கிணற்றை காணோம் என்கிற திரைப்பட காமடி ஞாபகத்துக்கு வந்தாலும் வெகு விரைவில் இன்னும் சில வருடங்களில் இந்த செய்தி அதிகமாக உணரப்படும்! அதுவே யதார்த்தமான உண்மையும் கூட! ஆம், யாழ்ப்பாணத்தில் கிணறுகள் காணாமல் போகும்! இன்னும் ஏராள மான பகுதிக்கும் உவர்நீர் உட்புகும்! காலப்போக்கில் முற்றாக விவசாயம் செய்யமுடியாத அளவுக்கு கூட எமது பிரதேச நீர் உவராகலாம்.

கட்டுப்பாடு அற்ற வகையில், நீலத்தடி நீர்க் கட்டுமானங்ளை சரியாக புரிந்துகொள்ளாமல் கண்மூடித்தனமாக அடிக்கப்படும் ஆழ்துளை கிணறுகளும் குழாய்க் கிணறுகளும் இந்த நிலையை ஏற்படுத்தவுள்ளன. இச் செயல், சாதாரண கிணறுகள் மூலம் அன்றாட நீர்த்தேவையை பூர்த்தி செய்யும் சாதாரண மக்கள், விவசாயிகளின் வாழ்வியலை எதிர்காலத்தில் இக்கட்டில் கொண்டு போய் நிறுத்தப் போகிறது. ஏற்கனவே வடக்கின் சில பகுதிகளில் குழாய்க்கிணறுகளின் தாக்கத்தால் வற்றிப்போன கிணறுகள் தொடர்பான செய்திகள் பதிவாகி உள்ளன.

இந்தியாவின் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான் மாநிலங்கள் உட்பட உலகின் பலவேறு நாடுகளில் இந்த அனுபவத்தில் பல உதாரணங்கள் உள்ளன! அது நாளை நமது





பிரதேசங்களிலும் நடக்கப் போகிறது. இதை புரிந்துகொள்வதற்கு, யாழ்ப்பாண நிலத்தடி நீர்க்கட்டுமானத்தை எளிய முறையில் விளங்கப்படுத்த முயல்கிறேன்.

யாழ்ப்பாண குடாநாடு கிட்டத்தட்ட நான்கு பக்கமும்(மூன்று பெருங்கடல்கள் உட்பட) உவர்நீரால் சூழப்பட்ட ஒரு குடாநாடு. நிலவியல் அடிப்படையில் சுண்ணாம்புக் கற்பாறைகளின் மீதே யாழ் குடாநாடு அமைந்துள்ளது. சிலபகுதிகளில் இந்த பாறைகள் நிலமட்டத்துக்கு அண்மையா கவும் சில இடங்களில் ஆழமாகவும் இந்த பாறைகளே உள்ளன.

சீமெந்து தயாரிப்புக்கான மூலப்பொரு ளான சுண்ணாம்பு பாறைகள் எனும் இந்த வளத்தை குறிவைத்து தான் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருந்தது. இந்த சுண்ணாம்புக் கற்பாறைகளிடையே ஏராளமான வெடிப்புகள் உள்ளன. அத்துடன் அவை மெதுவாக கரையும் தன்மை கொண்டவை. அதனால் தான் சுடுதண்ணீர் கொதிக்க வைத்த கேத்தலின் அடியில் கல்சியம் படிவுகளை நீங்கள் காண்பதுண்டு. இந்த பண்புளால் இந்த பாறைகளுக்குள் நிலத்தடியில் மிகப்பெரிய நிலத்தடி நீர்த்தேக்கங்கள் (shallow aqufiers) போன்ற இயற்கை அமைப்புகள் உண்டு. யாழ்க்குடாநாட்டை பொறுத்தவரை அவ்வாறான மேற்பரப்பை அண்டிய 5 ளாயடடழற யஙரகைநசள ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.


அதில் சுன்னாகம் aqufier மிகப்பெரியது.




வழுக்கை ஆற்றின் படுக்கை அந்த aqufier க்கு நீர் ஊட்டும் உயிர்நாடியாக உள்ளது. இன்னும் கீழே சென்றால் Deep aqufiers என்று சொல்லப்படும் சற்று ஆழமான அதே போன்ற கட்டமைப்புகள் இருக்கும். அதன் கீழே செல்லும் போது Saline water என்று சொல்லப்படக்கூடய நிறைகூடிய உவர்நீர் இருக்கும்.

நமது குடாநாடு கடலால் சூழப்பட்டிருப்ப தால் எப்போதும் கடல் நீர் உள்ளே புகுந்து மேற்படி  நீர்க் கட்டமைப்பு உவராகும் அபாயம் இருந்துகொண்டே இருக்கும் (காலப்போக்கில் முற்றாக உவராகி வரும் காரை நகர் அதற்கு ஒரு உதாரணம்). ஆனால், அவ்வப்போது கிடைக்கும் மழைநீர் நிலத்தினுள் சென்று இந்த இடைவெளிகளை நிரப்புவதோடு உயர் அழுத்தத்தையும் கொடுப்பதால் இந்த கட்டமைப்பில் இருந்து மேலதிக நல்லநீர் கடலினுள் உந்தப்படும் தன்மை இப்போது வரை நடக்கிறது. அவ்வாறு இந்த யஙரகறைச இல் இருந்து நிலத்தடி நீர் கடலினில் உந்தப்படும் இடங்களாக கீரிமலை, மருதங்கேணி போன்ற இடங்கள் ஏற்கவே ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த நன்னீர் கலக்குமிடம் உவர்த்தன்மை குறைவாக இருக்கும் காரணத்தாலேயே மருதங்கேணியில் உவர்நீர் சுத்திகரிப்புநிலையும் பிரேரிக்கப்பட்டது.

ஆக இந்த சுண்ணாம்புக்கற் பாறை வெடிப்புகளினூடு பாய்ந்தோடும் நீரைத்தான் நாம் ஊற்று என்று கண்டுபிடித்து கிணறுகளை




வெட்டியுள்ளோம். நிலாவரை கிணறு போன்ற இடங்கள் இந்த பிரமாண்ட நிலத்தடி நீர்த்தேக்கத்துடன் பெரிய நேரடித் தொடர்பில் இருப்பதால் வற்றாத கிணறுகளாக அறியப்படுகின்றன.

அதேபோல தாழ்வான பகுதியில் உள்ள பொக்கணை கிணறு, மாரிகாலங்களில் இந்த யஙரகநைச உள் அழுத்தம் அதிகரித்து நீரை வெளியே தள்ளுகிறது. நிற்க. இன்னொருபுறம், உலகளாவிய காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் இப்போது கிடைக்கும் மழைவீழ்ச்சி பற்றியும் சற்று பேசியாக வேண்டும். கடந்த காலங்களில் வருடத்திற்கு 120 நாட்கள் வரை யாழ்ப்பாணத்துக்கு கிடைத்து வந்த மழைவீழ்ச்சி பாதியாக 60 நாட்களாக சுருங்கிவிட்டது. ஆனால் அதே அளவு அல்லது சில வேளைகளில் அதிக மழை குறைந்த நாட்களில் கிடைக்கிறது.

நாங்கள் வீட்டு வளவு முழுவதையும் காங்கிறீட்டால் மூடியும், வாய்க்கால்கள் சீமெந்தால் கட்டப்பட்டும், பல குளங்கள் பாதி மூடப்பட்டும் (தூர்வாரப்படாமல்) இருப்பதாலும் கிடைக்கும் மழை, சில நாள் வெள்ளப்பிரச்சினைகளுடன் வெகு விரைவாக கடலை சென்று அடைந்துவிடுகிறது. ஆக நிலத்தடிக்கு முன்னர் போல நீரை மெதுவாக ஊடகடத்த இப்போது முடிவதில்லை.

இது அதிக வரண்ட நாட்களை எங்களுக்கு உருவாக்கி வருகிறது. நிற்க.

இந்த களச்சூழல் இவ்வாறு இருக்க, அண்மைக்காலங்களில் கட்டுப்பாடு அற்ற நிலையில் ஏராளமான குழாய்க் கிணறுகள் கண்மூடித்தனமாக அடிக்கப்படுகின்றன. இந்தப்பதிவு குழாய்க்கிணறுகளுக்கு முற்றிலும் எதிரான பதிவு அல்ல. அவை சரியான முறையில், சூழலின் நீர்பாதுகாப்பை உறுதிப்படுத்தி அடிக்கப்பட வேண்டும் என்பதையே பேசவிளைகிறது.

இலங்கையில் குழாய்கிணறுகளை




அடிப்பதற்கு சட்டபூர்வ அனுமதி பெறப்பட வேண்டும்.

பிரதேச செயலகங்கள், இலங்கை நீர்வள சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை உள்ளட்ட அரச திணைக்களங்கள் தான் அதன் பங்காளிகள்.

1. அடிக்கவேண்டிய குழாய்க்கிணறு களின் ஆழம், அந்த பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாவனை, ஏனைய கிணறுகளின் ஆழம், எடுக்கவேண்டிய நீரின் அளவு, எடுக்க கூடிய நீரின் அளவு உள்ளிட்ட பல்வேறு தரவுளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டும். ஊழலுக்கு விலைபோகாமல் மேற்படி அரச திணைக்களங்கள் அந்த பணியை சரியாக செய்ய வேண்டும்.

2. குழாய்க்கிணறு அடிக்கும் இயந்திரம் கொண்டுவரும் நிறுவனங்கள் அதற்கான அனுமதிப்பத்திரத்தை கொண்டிருக்கவேண்டும். அவர்களுக்கு ரெஅடிநசிடயவந வழங்கப்படுகிறது. அவர்கள் அந்த பணியை உணர்ந்து சரிவரச்செய்யவேண்டும்.

3. பாவனையாளர்கள் பக்கத்து வீட்டுக்காரனுக்கு என்ன நடந்தாலும் பறவாயில்லை என்ற மனநிலையில் கொடுக்கப்பட்ட அனுமதியை தாண்டி அதிக ஆழமாக குழாய்க்கிணறு அடித்தாலோ, அதிக நீரை வியாபாரத் தேவை உள்ளிட்ட விடையங்களுக்காக உறிஞ்ச ஆரம்பித்தாலோ சூழலில் உள்ள கிணறுகள் வற்றும்.

4. அரச திணைக்களங்கள் மேற்படி அனுமதிப் பத்திரங்கள் பெறாமல் தோண்டப்பட்ட கிணறுகள் மற்றும்

அனுமதிக்கப்பட்ட ஆழத்தை விட அதிகமான ஆழத்துக்கு தோண்டப்பட்ட கிணறுகளை மூட ஊழல் இல்லாமல் நியாயமாக முன்வரவேண்டும்.

5. பொதுமக்கள் இது தொடர்பான விழிப்புணர்வை எல்லோருக்கும் ஏற்படுத்த வேண்டும். உங்கள் பிரதேசத்தில் அடிக்கப்படும் குழாய்க் கிணறுகளின் அனுமதியை விசாரிக்கவும். குழாய்க்கிணறு தோண்டும் நிறுவனத்தின் இயந்திர அனுமதியை சரிபார்க்கவும். அத்துமீறி அனுமதி இன்றி அடிக்கப்படும் குழாய்க்கிணறு மற்றும் அனுமதிக்கு அதிகமாக வியாபாரத்தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் குழாய்க்கிணறுகளை பகிரங்கப்படுத்தவும். 911 என்ற தொலை பேசி இலக்கத்திற்கு முறையிட்டால், பொலீஸ் திணைக்களம், பிரதேச செயலகம், கிராமசேகவர், நீர்வள சபை ஆகியவற்றுக்கு மேற்படி முறையீடு உடனடியாக அனுப்பப்படும். பல்வேறு கோணத்தில் விசாரணை நடக்கும்.

இவற்றை நீங்கள் செய்யாத பட்சத்தில் யாழ்க்குடாநாட்டின் கிணறுகள் வற்றி, காலப்போக்கில் மொத்தக்குடாநாடும் உவர் நீராவதை இன்னுல் சிலகாலத்தில் பார்ப்போம்.

மேற்பரப்பில் தான் நீங்கள் எல்லைகளை போடலாம். பணக்காரன், ஏழை, இந்த தொழில் செய்பவன், படித்தவன் படிக்காதவன், இந்த சாதிக்காரன், அந்த மதத்தவன், இந்த கிராமம், அந்த பிரதேசம், அந்த மாவட்டம் என்ற வாதங்கள் எல்லாம் மேற்பரப்பில் போடப்பட்ட வெறும் வேலிகளும் மதில்களும் மட்டுமே!
நிலமும், நீரும், வானும் மண்ணும் காற்றும் மழையும் என்றுமே எல்லைகளை பார்ப்பதில்லை.
வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் எங்களை போன்ற ஒரு மாவட்டத்தில் 1990 முன்னர் வரை கிணறுகளில் நீரை எடுத்து பருகி வந்த மக்கள் குழாய்க்கிணறுகளை 1990 களின் பின்னர் கட்டுப்பாடின்றி அடிக்க ஆரம்பித்து இப்போது 250 அடி ஆழம் வரை மீண்டும் மீண்டும் குழாய் கிணறுகளை ஆழப்படுத்தி நீரை தேடுகின்றனர் என்பதை அண்மையில் லுழரபெ றயவநசிசழகநளளழைையெடள – ழெசவா( வடக்கின் நீர்த்துறைமையாளர் வட்டம்) யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்த இணையவழிகலந்துரையாடல் ஒன்றில் கலந்து சிறப்பித்த பேராசிரியர் கவலையுடன் விளங்கப்படுத்தினார். இத்த நிலை நாளை எங்கள் பிரதேசத்திற்கும் வருவதை தடுக்க இன்றே விழித்துக்கொள்வோமாக.

நீரின்றி அமையாது உலகு.

# இன்னா செய்தாரை ஒறுத்தல்...



ராஜீவ் காந்தியை கொலை செய்ய உடந்தையாக இருந்த சாந்தன் இப்போது தமிழ்நாட்டில் ராஜீவ்காந்தி மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வருகிறார். EPRLF தலைவர் பத்மநாபாவிடம் படிக்க வசதி இல்லை, தங்க இடமும், உண்ண உணவும் இல்லை என்று இரந்து போய்க் கேட்டு அவரது தயவில் வாழ்ந்துகொண்டே சென்னையில் வைத்து அவரைக் கொலை செய்ய உதவியதும் இதே சாந்தன் தான். ராஜிவ் கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுள்ள இவரை இலங்கைக்கு அழைத்துவர உதவுமாறு முன்னாள் EPRLF உறுப்பினரும் தற்போதைய EPDP தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் சாந்தனின் உறவினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

காலம் தான் எத்தனை விசித்திரமானது.

– திலீப்குமார் கணேசன்



# நானும் பிரபாகரனும்: ஒரு முன்னாள் போராளியின் மனக்குமுறல்

**கௌரிபால் சிறி (எ) சாத்திரி**

நன்றி:
**ஜப்னா மொனிட்டர்**

தமிழில்:
**பா.ராஜா**



எனது வாழ்நாளில் சுமார் 18 ஆண்டுகளை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன், புலிகளின் தலைவர் பிரபாகரனை தலைவராக ஏற்றுக் கொண்டு கழித்தேன். 1983-ல் இனக் கலவரத்தை தொடர்ந்து, எனது இந்த நீண்ட நெடிய பயணம் தொடங்கியது.

1983 இனக் கலவரத்தை, ஐக்கிய தேசியக் கட்சியின் (யூ.என்.பி.) ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனே தலைமை யிலான அன்றைய இலங்கை அரசாங் கம், மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஈவு இரக்கமின்றி படுகொலை செய்யப்பட்ட னர். நூற்றுக்கணக்கான தமிழ் பெண்கள் சிங்களக் கும்பல்களால் சொல்ல முடியாத பாலியல் துன்பல்களுக்கு உள்ளானார்கள். இத்தகைய அட்டூழியச் சம்பவங்கள் எல்லாமே ஜெயவர்த்தனே அரசாங்கத்தின் மறைமுகமான அங்கீ காரத்தைப் பெற்றிருந்தன என்பது கலவரம் நடந்த விதத்தில் இருந்து தெட்டத் தெளிவாக தெரிந்தன. திருநெல்வேலியில் இராணுவ தொடரணி மீது, புலிகள் நடத்திய தாக்குதலுக்கு, பழிவாங்கும் முகமாகவும், தமிழ்

சமூகத்துக்கு ஒரு கொடூரமான பாடம் கற்பிக்கும் நோக்கத்துடன் இந்த சம்பவங்களை ஜே.ஆர். அரசு அரங்கேற்றியது.

இந்த கலவரத்தால், சிதலமடைந்த கட்டடங்களும், என் மக்களின் அழுகுரலும் என்னை மிகவும் பாதித்தது.  இதனால், பழிவாங்கலையும் நீதியையும் தேடுவதற்கான ஒரு பெரும் தூண்டுதலை உணர்ந்தேன். இந்த உணர்வுதான் என்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு போராளியாக இணைத்துக் கொள்ளத் தூண்டியது. வன்முறை தொடர்பாக எழுந்த நினைவலைகள் எனக்கு ஓர் ஊக்கியாக இருந்தது. இத்தகைய கொடூரமான செயல்களுக்கு சிங்கள அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று கடுமையான தீர்மானம் எனக்குள் ஏற்பட்டது.  1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களால், எனது வாழ்க்கைப் பாதை மாற்றியமைக்கப்பட்டு எனது மக்களின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தில்  ஈடுபட என்னைத் தூ ண்டியது.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக தனித் தமிழர் தேசம் என்ற கனவால் உந்தப்பட்ட எனது நண்பர்களில் பலர், பல்வேறு தமிழ்ப் போராளிக் குழுக்களின் அழைப்புக்களின் பின்னே அணி திரண்டனர். எனது நெருங்கிய நண்பர்கள் பல்வேறு விடுதலை இயக்கங்களில் தங்களை இணைத்துக் கொண்டனர். ஒரு கட்டத்தில், எங்கள் போராட்டக் களமானது சுமார் 30 முதல் 35 வெவ்வேறு போராளிக் குழுக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு போராட்டக் குழுவும், அதன் சொந்த முறைகளையும் போராட்ட உத்திகளையும் கொண்டிருந்தன. ஆனால், இந்த போராட்டக் குழுக்கள் அனைத்தும் இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு தனி நாட்டை நிறுவும் கனவு எனும் ஓர் ஒற்றை ஒருங்கிணைக்கும் இழையால் பிணைக்கப்பட்டன.

எனது நெருங்கிய நண்பர்கள் அனைவரும் ஏதோ ஒரு போராட்டக்குழுவுடன் இணைந்திருந்தோம். நாங்கள் ஒவ்வொருவரும் சுதந்திரம் குறித்த ஒரே பார்வையால் பிணைக்கப்பட்டோம். இருந்தாலும், எனக்கான இடம், விடுதலைப் புலிகள் அமைப்புதான் என்பதை நான் உணர்ந்தேன். எங்களைப் பொருத்தவரை, அப்போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஓர் உத்வேகமாக இருந்தார். ஆனால், பிற்காலத்தில் அவர் அடைந்த “சூரியக் கடவுள்“  நிலையை அவர் அப்போது அடையவில்லை.

பிரபாகரனின் போர் தந்திரங்கள் தமிழ் ஈழத்தை அடைய வழிவகுக்கும் என்று

நம்பி, பல ஆண்டுகளாக, விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் உயிர் நீத்தனர். எவ்வாறாயினும், பிரபாகரனின் பிடிவாதப் போக்கினாலும், அவரது தவறுகளாலும் எமது கனவுகள் சிதைந்தன. போரின் இறுதிக் கட்டத்தில், பிரபாகரனின் தலைமையின் கீழான விடுதலைப் புலிகள் அதன் ஆரம்ப இலக்குகளை இழந்து, யாரை பாதுகாப்பதாக உறுதியளித்து ஆயுதங்களைத் தூ க்கினார்களோ, அதே தமிழ் மக்களுக்கு எதிராக தமது துப்பாக்கிகளைத் திருப்பினர்.



இப்போது சிந்தித்துப் பார்க்கும்போது, பிரபாகரனின் நடவடிக்கைகளே எமது தோல்விக்கு பிரதான காரணமாகியது.  பிற போராளிக் குழுக்களை தடை செய்து, நூற்றுக் கணக்கான பிற போராளிக் குழுக்களை சேர்ந்த போராளிகளைகொலை செய்தது, வடக்கு, கிழக்கில் காலம் காலமாக வாழ்ந்துவந்த முஸ்லீம் மக்களை பலவந்தமாக வெளியேற்றி, அவர்களின் சொத்துக்களை கொள்ளையடித்தது, அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்கள் மீதான கொடூரமான தாக்குதல்களின் பின்னணியில் பிரபாகரனே காரணகர்த்தாவாக இருந்தார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது கூட, பிரபாகரனின்

உத்தரவின்பேரில்தான் நடந்தது. இத்தகைய நடவடிக்கைகள், உலக அரங்கில் விடுதலைப் புலிகள் தொடர்பான பிம்பத்தை கடுமையாகச் சிதைத்தது. துரதிருஷ்டவசமாக, எமதுஅமைப்பில் இருந்த இளம், அப்பாவிப் போராளிகளே பிரபாகரனின் இந்த செயல்களுக்கான பிரதிபலன்களை சுமந்தனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் என்ற வகையில், பல வருடங்களை அந்த இயக்கத்துக்காக அர்ப்பணித்தவர் என்ற வகையில், ஒரு காலத்தில் எமது தளராத தலைவர் என போற்றப்படும் பிரபாகரன் இறுதி வரை தனது நம்பிக்கையில் உறுதியாக இருந்தார் என்பதை ஒப்புக் கொள்வதில் நான் சற்று ஆறுதலடைகிறேன். கமல் குணரத்னவின், 'ரோட் டு நந்திக்கடல்' புத்தகத்தில் உறுதிப்படுத்தப்பட்டபடி, பிரபாகரன் கடைசித் துப்பாக்கிச் சூடு வரை போராடினார் என்பதில் நான் ஆறுதல் அடைகிறேன். அவரது இறந்துவிட்டார் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் அவர், தனது குடும்பம் மற்றும் அவரது இளைய மகன் ஆகியோர் உள்பட அனைவரையும் இழந்தார்.

பிரபாகரன் இறுதிவரை போராடி இறந்துவிட்டார் என்பது, என்னைப் போன்ற போராட்டத்தில் தமது இளம் வாழ்வை முழுமையாக தொலைத்த பல்லாயிரக்கணக்கான முன்னாள் போராளிகளுக்கு ஒரு வகையான ஆறுதலைத் தருகிறது. பிரபாகரன் தனது குடும்பத்தையும் இழந்து தானும் களத்தில் இறந்தார் என்பது, உலகெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான முன்னாள் போராளிகளுக்கு அவர்களின் கடந்த காலத்தை மறந்து, அன்றாட வாழ்க்கை மேற்கொள்ள கூடியதாக உள்ளது.

பிரபாகரன் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று குறிப்பிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் சுயநல அமைப்புகளின் கூற்றுகள் எங்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. இந்தக் கூற்றுகள் தவறானவை என்பது எங்களுக்குத் தெரியும். 50,000 அப்பாவி இளைஞர்களின் மறைவுக்குப் பிறகு, அவர் தலைமறைவாகவோ, உயிருடன் இருக்க முடியாது. ஒருவேளை இந்த மோசடிக்காரர்கள் கூறுவதுபோல, பிரபாகரன் உயிருடன் இருந்தால், தயவு செய்து மரணத்தைத் தழுவுங்கள் என்பதே எனது வேண்டுகோளாகும், ஏனென்றால், அவர் வாழும் காலத்தில், அளவிட முடியாத இழப்பையும் துன்பத்தையும் அவர் ஏற்கனவே ஏற்படுத்திவிட்டார்.

# மாத்தையாவின் கதை:
# புலிகள் அமைப்பில் அரசியல், அதிகாரப் போட்டி இன்னும் பல

பாகம் 02



இந்திய ராணுவ அதிகாரிகளுடன் மாத்தையா


எழுத்தாளர்:
**கணியன் பூங்குன்றன்**

நன்றி: ஜப்னா மொனிட்டர்

மொழிபெயர்ப்பு: **பா.ராஜா**


## அதிகரிக்கும் மாத்தையாவின் புகழ்

இந்திய அமைதிப் படைக்கும் (ஐ.பி.கே.எஃப். – Indian Peace Keeping Force), தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு குறிப்பிடத்தக்க வகையில் பிரச்சினைக்குரியதாகி,1987 ஆம்


இந்திய ராணுவ வீரர்களை ஒப்படைக்கும் நிகழ்வில், இடமிருந்து- மாத்தையா, சங்கர், ரஹீம்

ஆண்டு, அக்டோபர் மாத வாக்கில் முழு அளவிலான போராக மாறியது. 1987 ஆம் ஆண்டு டிசம்பரில், இந்தியப் படையுடனான கடுமையான மோதல் களைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர்.

இதன்போது, பிரபாகரன் முல்லைத்தீவில் உள்ள நித்திகைக்குளத்தில் தனது தளத்தை நிறுவினார். அதே சமயத்தில், மாத்தையா ஓமந்தை கோளியங்குள த்தில் தனது தளத்தை அமைத்தார். இந்த இக்கட்டான காலகட்டத்தில், வன்னிப் பிரதேச பொறுப்பாளராக இருந்த மாத்தையா ஏற்படுத்தியிருந்த தொடர்புகளும், வன்னி மண் மீதான அவரது ஆழமான பரிச்சயமும் பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளு க்கும், அவர்களின் புதிய தளங்களை நிறுவுவதற்கும், அவர்களின் நடவடிக் கைகளைத் தொடர்வதற்கும் பெரிதும் உதவியாக இருந்தன எனலாம்.

இந்திய ராணுவத்துடனான சண்டை யின்போது, விடுதலைப் புலிகள் அமைப்பினர் இந்திய ராணுவ வீரர்கள் 18 பேரை போர்க் கைதிகளாக பிடித்தனர். இந்தியாவுடனான உறவை மேம்படுத்தும் வகையில், அந்த வீரர்களை இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்க முடிவு

செய்தனர். இந்த ஒப்படைப்பு நிகழ்வானது, ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் புலிகளால் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது. இந்த நிகழ்வு இந்தியப் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் சாவகச்சேரி, உடுவில் ஆகிய இடங்களில் நடைபெற்றது. புலிகள் தரப்பில் இதற்கு மாத்தையா தலைமை வகித்தார். இதற்காக கிட்டுவின் செய்தித் தொடர்பாளர் ரஹீம் (பாலசுப்பிர மணியன் கனகரத்தினம்), சுமார் 15 இந்திய ஊடகவியலாளர்களுடன் சென்னையில் இருந்து இந்திய ராணுவ விமானத்தில் யாழ்ப்பாணம் வந்தார். விடுதலைப் புலிகளின் இந்த சமயோசித நடவடிக்கையானது, அதன் பிம்பத்தை அதிகரிப்பத ற்காக மட்டுமின்றி, நடைமுறை பிரச்ச னைகளில் இருந்தும் உருவானது. விடுதலைப் புலிகள் அமைப்பினர் தொடர்ந்து போரில் தீவிரமாக ஈடுபட்டிரு ந்தால், போர்க் கைதிகளை வைத்துக் கொள்வதற்கு போதிய வசதிகள் அவர்களிடம் இருக்கவில்லை. மேலும், இந்த இந்திய ராணுவ வீரர்களுக்கு பிரச்சினை எதுவும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதிலும் புலிகள் எச்சரிக்கையாக இருந்தனர்.

பிடிபட்ட இந்திய ராணுவப் படையினரை முக்கிய எதிரிகளாக புலிகள் பார்க்க வில்லை என ஜாஃப்னா மானிட்டரிடம் பேசிய ரஹீம் வெளிப்படையாகத் தெரிவித்தார். மேலும், இது ஒரு “விலாசம் அடிக்க” மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் அவர் கூறினார். இந்த நிகழ்வு, உலகெங்கிலும் உள்ள முக்கிய நாளிதழ்களில் வெளியிடப்பட்டதுடன், உலக நாடுகளின் கணிசமான கவனத்தையும் பெற்றது. இந்த நிகழ்வு தொடர்பான செய்திகள், விடுதலைப் புலிகளுக்கு பெரிய அளவிலான விளம்பரத்தைத் தேடித் தந்ததோடு மட்டுமல்லாமல், மாத்தையாவுக்கு புகழைத் தேடித் தந்தது.

இந்த ஒப்படைப்பு நிகழ்வின் போது, பிரிகேடியர் மஞ்ஜித் சிங் மின்ஹாஸுடன் மாத்தையா நிற்கும் புகைப்படம் அடையா ளமாக மாறியது. இந்தச் செயலும், இது தொடர்பான செய்திகளும் சர்வதேச அரங்கில் மாத்தையாவின் அந்தஸ்தை உயர்த்தியது.

## மாத்தையா மீதான ஊடகங்களின் கவனம்: சமாதானப் பேச்சுகளில் புலிகளின் முகமாக மாத்தையா

இந்தக் காலகட்டத்தில், தென் இலங்கை யில் இந்தியாவுக்கு எதிரான உணர்வு அதிகரித்தது. 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், கே.ஆர்.ஜெயவர்த்தனவைத் தொடர்ந்து, ரணசிங்க பிரேமதாச வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் மற்றும் தெற்கு மாகாணத்தில் அரசுப்




பிரேமதாசாவுடன் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழு

படைகள் மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனா போராளிகள் தொடர்பான வன்முறைகளின் பின்னணியில் பதவியேற்றார் ரணசிங்க பிரேமதாசா. தேர்தலில், இரு முக்கிய அரசியல் கட்சிகளும் இந்திய–இலங்கை ஒப்பந்தத்தைத் திரும்பப் பெறுவதாக உறுதியளித்ததோடு, இந்தியப் படைகளை திரும்பப் பெற முயன்றன.

இந்தச் சமயத்தில், இந்திய அமைதிப் படையால் பாதிக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பினரும் போர் நிறுத்தத்தை விரும்பினர். இதற்காக அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர். “எதிரியின் எதிரி நண்பன்” என்ற பழமொழிக்கு ஏற்ப, அவர்களது செயல்பாடு இருந்தது. இந்தப் பேச்சு வார்த்தையின் முதன்மையான நோக்கம் என்னவென்றால், இலங்கையில் இருந்து இந்திய படைகளை வெளியேற்றுவதாகும். பிரேமதாசா அரசாங்கம், இலங்கையில் இருந்து இந்தியப் படைகளை வெளியேற்றும் முக்கிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் நோக்கில், விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பினருடனான பேச்சுவார்த்தைக்கு நம்பகத் தன்மையையும் முறையான கட்டமைப்பையும் வழங்கும் முயற்சியில், பிரேமதாசா அரசாங்கம், அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஆலோசனை வழங்கியது. இந்த நடவடிக்கையானது, பேச்சுவார்த்தைக்கு ஒரு முறையான தளத்தை வழங்குவதையும், அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு மிகவும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையை எளிதாக்குவதையும் நோக்கமாகக்




பிரபாகரன், கேணல் சங்கர்- நித்திகைக்குளம் காட்டில்

கொண்டது. “விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி” என்ற அரசியல் கட்சியை உருவாக்க பிரபாகரன் ஒப்புதல் அளித்து, அதன் தலைவராக மாத்தையாவையும், செயலாளராக “யோகி” யோகரத்னத் தையும் நியமித்தார்.

இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பெரிய அளவில் ஊடக வெளிச்சத்தைப் பெற்றன. மாத்தையா தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசின் விருந்தினர்களாக கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கி பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். இந்த நேரத்தில் மாத்தையா, மக்களிடையே பிரபலமடை ந்தார். மாத்தையாவின் இருப்பு மற்றும் அவரது செயல்பாடுகள் குறித்து தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் விரிவாக செய்திகள் இடம்பெற்றன.

## நீக்கமற நிறைந்திருந்த மாத்தையாவும்: பிரபாகரனின் பாதுகாப்பின்மையும்

மாத்தையாவின் முக்கியத்துவமும் பொது அங்கீகாரமும் அவரது தலைவரான பிரபாகரனுக்கு அச்சத்தை



இடமிருந்து-இந்திய ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்ஹிரத் சிங்குடன், புலேந்திரன், பிரபாகரன், மாத்தையா

ஏற்படுத்தியதாக விடுதலைப் புலிகளின் நம்பகமான வட்டாரங்கள் ஜாஃப்னா மானிட்டரிடம் தெரிவித்தன. முன்னாள் முக்கிய எல்.டி.டி.இ. தலைவர் ஒருவர், மாத்தையா உச்சக்கட்டப் புகழில் இருந்தபோது, நிலவிய சூழல் குறித்து 'ஜாஃப்னா மானிட்டர்' இதழுக்கு மிகவும் விரிவாக எடுத்துக் கூறினார். மாத்தையா ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த காலகட்டம் குறித்து அவர் விவரித்தார்: "நீங்கள் காலையில் எழுந்து, நாளிதழ்களைப் படித்தால், அதில் மாத்தையா குறித்த செய்திகள் இருக்கும். நீங்கள் வானொலியை இயக்கினால், மாத்தையா குறித்த செய்தி, தகவல்கள் ஒலிபரப்பாயின. கிட்டத்தட்ட மாத்தையாவின் பெயர் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்தது. ஊடகங்கள் அனைத்திலும் செய்தி வடிவில் பேசப்பட்ட மாத்தையா, அனைவரும் உச்சரிக்கும் ஒரு பெயராகவும் மாறினார். இத்தகைய பரவலான அங்கீகாரம், மற்றவர்களிடம், குறிப்பாக, பிரபாகரன் போன்ற குறுகிய மனப்பான்மை உள்ள, உள்ளார்ந்த பாதுகாப்பின்மைக்குப் பெயர் பெற்ற ஒருவருக்கு, பாதுகாப்பின்மை உணர்வுகளை எளிதில் ஏற்படுத்தலாம்" என்று எல்.டி.டி.இ. முன்னாள் தலைவர் மேலும் தெரிவித்தார்."

**தொடரும்....**



# மகள்களைப் பெற்ற அப்பாக்கள்...

குட்டி பவதாரணியுடன் இருக்கும் இந்த ஃபோட்டோவைப் பதிவேற்றி “அன்பு மகளே” என்று விளித்து இருந்தார் இசை ஞானி இளையராஜா.ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனேன். அப்பாக்களுக்கு மகள்களைக் கொஞ்சுவதை விட வேறு என்ன சந்தோஷம் இருக்கிறது..

ரசிகர்களின் பெரு வரவேற்பு பெற்ற காதலுக்கு மரியாதை படத்தில் இசை ஞானி இசையமைத்து இருந்தார். படத்தில் டைட்டில் கார்ட் விழும் போதே

இது சங்கீத திருநாளோ
புது சந்தோஷம் வரும்நாளோ
ரதி நம் வீட்டில் பிறந்தாளோ
சிறு பூவாக மலர்ந்தாளோ
சின்ன சின்ன அசைவில் சித்திரங்கள்
வரைந்தாள்
முத்த மழை கன்னம் விழ
நனைந்தாளே
கொஞ்சி கொஞ்சி பிஞ்சு நடை
நடந்தாளே

என்று பவதாரனி பாடும் பாட்டு ஓடிக் கொண்டு இருக்கும். எனக்கு என்றைக்கும் பேவரிட் அது . அப்பா -மகள் அற்புத கம்பினேஷன். இந்தப் புகைப்படத்திற்கு அந்தப் பாட்டு சாலப் பொருத்தம் என்று நினைக்கிறேன். ஆழ்ந்த இரங்கல்கள்....

– ஷஃபார் அகமட்

## சபேசன் சிதம்பரநாதன்: யாழ்ப்பாணத்தின் பெருமை!

(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதனால் எழும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்ளத் தயாராக இருந்தேன். ஷெஃபீல்டில், 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை, நான் எலக்ட்ரானிக் இன்ஜினீயரிங்கில் B.Eng (Hons) படித்தேன். தொடக்கத்தில், ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வது சிரமமாக இருந்தது. நான், எனது பள்ளிப் படிப்பு முழுவதும் தமிழ் வழியில் படித்திருந்ததால், இப் பிரச்சினை ஏற்பட்டது. இத்தகைய தடைகள் இருந்தபோதிலும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எனது இலக்கில் நான் கூடுதல் கவனம் செலுத்தினேன். மேலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முழு ஸ்காலர்ஷிப் வசதியுடன் இடம் பிடிக்க வேண்டும் என்பதில் மும்முரமாக இருந்தேன்.

ஒவ்வோர் ஆண்டும் எனது துறையில், தரவரிசையில் நான் முதலிடத்தில் இருந்தேன். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் நாட்டின் சிறந்த 18 மாணவர்களில் நானும் ஒருவனாக 2007 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டேன். இதற்காக, எனக்கு சர் வில்லியம் சீமன்ஸ் பதக்கம் வழங்கப்பட்டது. தொடர்ந்து நான் மேற்கொண்ட முயற்சிகள் எனக்கு பயனளித்தன. 2007 ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் எம்.பில். படிப்பதற்கு இடம் கிடைத்தது. பேராசிரியர் இயன் வொய்ட்டின் மேற்பார்வையில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. கேம்பிரிட்ஜ் காமன்வெல்த் டிரஸ்ட், கார்பஸ் கிறிஸ்டி கல்லூரி ஸ்காலர்ஷிப் மற்றும் ஈ.பி.எஸ்.ஆர்.சி (டி.ஐ.என்.ஏ. அண்ட் போயிங்) ஸ்டூடண்ட்ஷிப் ஆகியவை உதவி புரிந்தன.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நான் கல்வி மற்றும் பாடத்திட்டம் சாராத செயல்பாடுகளிலும் ஈடுபட்டேன். நான், கார்பஸ் கிறிஸ்டி கல்லூரியில் உள்ள மிடில் காம்பினேஷன் ரூமின் (எம். சி.ஆர்.) விளையாட்டுப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். மற்றும் கிரிக்கெட் அணியின் தலைவராகவும் இருந்தேன். யாழ்ப்பாணத்தில், பள்ளியில் படித்தபோது, சூழ்நிலை காரணமாக வேண்டாமென்று ஒதுங்கி இருந்த விளையாட்டின் மீது மீண்டும் ஆர்வம் ஏற்பட்டது.

எனது எம்ஃபில் படிப்பைத் தொடர்ந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலேயே பிஎச்.டி படிப்பையும் தொடர்ந்தேன். 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரை முனைவர் படிப்பை மேற்கொண்டேன். எலக்ட்ரானிக் இன்ஜினியரிங் துறையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின்

தலைப்பு, ‘Passive RFID real time sensing system for intelligent infrastructure’ என்பதாகும். என்னைப் பொறுத்தவரையில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமானது கற்பிக்கும் கூடம் என்பதை விட ஒரு படி மேல் என்றே சொல்வேன்  இப் பல்கலைக்கழகம் எனது வாழ்க்கைப் பாதையை மாற்றுவதற்கான ஒரு சக்தியாக இருந்தது. இந்தப் பல்கலைக்கழகமானது, 96 நோபல் பரிசு பெற்ற அறிஞர்களை உருவாக்கியுள்ளது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நான் படித்த காலத்தில், அப் பல்கலைக்கழகம் எனது கவனத்தை கூர்மைப்படுத்தியது, என் ஆர்வத்தைத் தூண்டியது, மேலும், எனது செயல்பாட்டை மேம்படுத்தியது. இந்தச் சூழலில், வெற்றிக்கான பாதை தெரிந்தது. நான், எனது உண்மை நிலையை உணர்ந்தேன். என் வாழ்க்கையில் அடுத்து வரும் வெற்றிகளுக்கான அடித்தளத்தை இப் பல்கலைக்கழகம் அமைத்துத் தருகிறது. இங்கே சிறந்த  வழிகாட்டிகளைப் பெற்ற நான் மிகுந்த அதிர்ஷ்டசாலி.

பெர்வாஸ்ஐடி நிறுவனத்தின் தலைவர் மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்குச் சொந்தக்காரர்.. இப்படி பன்முகத்தன்மையுடன் செயல்படும் நீங்கள், உங்களது வெற்றிப் பயணத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா? அதாவது, கல்வி முதல் தொழில்முனைவோர் வரை...

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது, எனது உண்மையான லட்சியம் என்னவாக இருந்தது என்றால், ஜே.பி. மார்கன் மற்றும் மோர்கன் ஸ்டான்லி போன்ற வங்கிகளில் சேர்ந்து பணிபுரிய வேண்டும் என்பதுதான். ஜே.பி. மார்கன் மற்றும் மோர்கன் ஸ்டான்லி போன்ற பெரிய நிறுவனங்களால் வழங்கப்படும் அதிக அளவிலான ஊதியம் என்னை ஈர்த்தது. இத்தகைய நிறுவனங்கள், புதிதாகப் பட்டம் பெற்று, வெளியே வரும் பட்டதாரிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 60,000 பவுண்டுகளை ஊதியமாக வழங்கினர். இதுவே துவக்க ஊதியமாக இருந்தது. இது ஒரு தகுதிபெற்ற எலக்ட்ரானிக் இன்ஜினியர் ஆரம்பதில் பெறும் ஊதியத்தை விட இரண்டு மடங்காகும். இருப்பினும், அச் சமயத்தில் என் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதாவது, நான் முனைவர் பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்தபோது, எனது கல்விச் செலவுக்கு போயிங் நிறுவனம் நிதியுதவி செய்தது.  விமானத்தில் அனுப்பப்படும் பொதிகள் தொலைந்து போவதால், விமான சேவை நிறுவனங்களுக்கு உலக அளவில் சுமார் 400 மில்லியன் டாலர் இழப்பு ஏற்பட்டதாக கணக்கிடப்பட்டது. இந்த சவாலான பிரச்சனைக்கு தீர்வு காண முன்வந்தேன். இதற்காக, ஒரு

புதுமையான தொழில்நுட்பத்தைக் கண்டறிந்தேன். அதுதான் பேட்டரி இல்லாத ரேடியோ அலைவரிசை மூலம் அடையாளம் காணும் கண்காணிப்பு அமைப்பு (battery-free radio frequency identification (RFID) tracking solution). இந்த முறையானது, மிகவும் துல்லியமாக கண்டறியும் முறையாகும். அதுவே பின்னாளில் எனது நிறுவனமான பெர்வாஸ்ஜடி-யின் அடிப்படை அமைப்பாக மாறியது.

எனது இந்த புதிய கண்டுபிடிப்பின் விவரங்கள் 300 பக்க ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டது. இது பின்னர், 100 பக்கங்களாகச் சுருக்கப்பட்டு, காப்புரிமை பெறப்பட்டது. இதுவே, நான் தொழில்முனைவோராக மாறுவதற்குக் காரணமாக இருந்தது எனலாம். பெர்வாஸ்ஜடி நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவராக இருந்த நான், அந்த நிறுவனத்தை உலகம் அறியச் செய்தேன். இந்த நிறுவனம், பல மில்லியன் டாலர் விற்பனை வருவாயைக் கொண்ட நிறுவனமாக உயர்ந்தது. எங்களது தயாரிப்பானது, சில்லறை வணிகம், சுகாதாரம், தொழில் துறை, லாஜிஸ்டிக்ஸ் உள்பட பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக, சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், எங்களது தயாரிப்புகள் பெரிதும் பயனளிக்கின்றன. மருத்துவமனையின் சொத்துகளை துல்லியமாகக் கண்காணிப்பது, மருத்துவ சாதனங்கள் சரியான இடத்திலும், சரியான நேரத்திலும் கிடைப்பதை உறுதி செய்வது போன்ற பணிகளைச் செய்கின்றன. பராமரிப்புப் பணிகளுக்கும் இவை பயன்படுத்தப்படுகின்றன. கோவிட்-19 தொற்று சமயங்களில் மருத்துவ உபகரணங்களைக் கண்டறிவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. இத்தகைய தீர்வானது, பல உயிர்களைக் காப்பதோடு, மருத்துவமனைகளுக்கு பல பில்லியன் பவுண்டுகளைச் சேமிக்க உதவும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணமானது, தகவமைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. தொழில்முனைவோருக்கு அத்தியாவசியமாகக் கருதப்படும் புதிய வழிகளை ஆராய்வதற்கு வழிவகுத்துள்ளது.

**பொதுவாக, தொழில் தொடங்க விரும்புவோர் இதுபோன்ற அறிமுகம் இல்லாத துறைக்குச் செல்ல விரும்ப மாட்டார்கள். நீங்கள் எப்படி இத் தொழிலைத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

நான் ஆரம்பத்தில் வயர்லெஸ் தொழில் நுட்பத் துறையில் நுழைந்து, உலகின் மிகத் துல்லியமான பேட்டரி இல்லாத கண்காணிப்பு அமைப்பைக் கண்டு பிடித்தேன். அப்போதே நான் தொழில்

முனைவோர் உலகத்துக்கு புதியவன்தான். ஒரு புதிய கண்டுபிடிப்பை தொழில் சார்ந்து அல்லது தொழிலாக மாற்றுவது என்பது எனக்கு ஒரு புதிய சிந்தனையாக இருந்தது. எனது கண்டுபிடிப்பை காலத்தின் தேவையாகக் கருதினேன். பிறந்த குழந்தையை எப்படி கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வார்களோ, அதைப் போல, எனது கண்டுபிடிப்பை மேம்படுத்த விரும்பினேன். எனது திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள, நான் புதிதாகக் கற்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் டெக்னாலஜி இன்னோவேஷன் மேனேஜ்மெண்ட் படிப்பில் சேருவது, அதைத் தொடர்ந்து, கேம்பிரிட்ஜ் ஜட்ஜ் பிசினஸ் ஸ்கூலின் தொழில்முனைவோர் கற்றல் மையத்தில் கேம்பிரிட்ஜ் இக்னைட் திட்டத்தில் சேர்ந்தேன். இந்தக் கல்வித் திட்டங்கள் எல்லாம் விலை மதிப்பற்றவை. ஓர் ஆய்வக சோதனையை எவ்வாறு வணிக நோக்கில் உருவாக்குவது என்பதை எனக்குக் கற்றுத் தந்தன.

2011 ஆம் ஆண்டு பெர்வாஸ்ஐடி நிறுவனத்தின் மூலம், பல்கலைக்கழக ஆய்வகத்தில் கண்டறிந்த புதுமைகளை வணிக ரீதியில் மாற்றத் திட்டமிட்டேன். இதற்காக, ராயல் அகாதெமி ஆஃப் இஞ்ஜினீயர்ஸ் எண்டர்பிரைஸ் ஃ பெல்லோஷிப் திட்டத்தின் கீழ், நிதியுதவி மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்றேன். இருப்பினும், தொழில்முனைவோர் சார்ந்த கல்வியை நான் தொடர்ந்து படித்து வந்தேன். 2018 ஆம் ஆண்டு, ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூலில், ஆத்தென்டிக் லீடர் டெவலப்மெண்ட் திட்டத்திலும், ராயல் அகாதெமி ஆஃப் இஞ்ஜினீயரிங்கில் எஸ்எம்இ லீடர்ஸ் விருது திட்டத்திலும் ஈடுபட்டேன். இந்தத் திட்டங்கள் எனது தலைமைத்துவத் திறனை மேம்படுத்தின.

அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சி ஆகிய இரண்டும் இருந்தால், எந்தவொரு துறையிலும் சாதிக்க முடியும் என்பது எனது கருத்து. மேதைமை என்பது பிறப்புடன் வரும் பண்பு அல்ல, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புத் தன்மையின் விளைவாகும். நான், எனது நிறுவனத்தைத் தொடங்கியபோது, என்னிடம் இரண்டு கண்டுபிடிப்புகள் இருந்தன. தற்போது என் கைவசம் ஐந்து கண்டுபிடிப்புகள் உள்ளன. இதை என் முயற்சிக்கு கிடைத்த ஒரு சான்றாக (பரிசாக) நான் பார்க்கிறேன்.

தொழில் துறையில் சிறந்து விளங்குவது என்பது பிறப்பு சார்ந்தது அல்ல. கற்றுத் தேர்ந்ததன் மூலம் சிறந்து விளங்க முடியும் என்பதை இந்த பயணம் மூலம் தெரிந்து கொண்டேன். இந்தப் பயணமானது, தொடர்ச்சியான கற்றல் மற்றும் முன்னேற்றத்துக்கான முயற்சி



2023 ஆம் ஆண்டு ராயல் அகாதெமி ஆ:.ப் இஞ்ஜினீயரிங்கின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபேசன் சிதம்பரநாதனுக்கு வாழ்த்துத் தெரிவித்தார் இளவரசி ராயல் அன்னே.

ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இதுவே, ஒரு பிஎச்.டி. மாணவராக இருந்து தொழில்நுட்ப முனைவோராக பரிணாம வளர்ச்சி பெற உதவியது.

**இலங்கையில் நடைபெற்ற கொடூரமான போருக்கு மத்தியில், பிறந்து, வளர்ந்தது எப்படி? ஒரு தனி நபராக உங்களைப் பாதித்ததா அல்லது வடிவமைத்ததா?**

இலங்கையில் நடைபெற்ற போரானது, எனக்கு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எனது சாதாரண தர (ஓ.எல்.) தேர்வுக்கு சில மாதங்களுக்கு முன்னர், எங்களது குடும்பம் சாவகச்சேரியை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மோதல் காரணமாக வடமராட்சிக்கு இடம் பெயர்ந்தோம். இந்த போராட்டங்களுக்கு மத்தியில், நான், எனது கற்கும் உபகரணங்களான பாடக் குறிப்புகள், புத்தகங்களை அங்கேயே விட்டுவிட்டுச் சென்றேன்.

வடமராட்சியில், தேர்வுக்கு என்னைத் தயார்படுத்திக் கொள்ள, நண்பர்களிடம் புத்தகங்கள் மற்றும் பாடக் குறிப்புகளை கடன் வாங்கிப் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய பிரச்சினைகளுக்கு இடையே, தேர்வை நன்றாக எழுதி, அதிக மதிப்பெண்கள் பெற்றேன்.



2021 ஆம் ஆண்டுக்கான குயின்ஸ் அவார்டு ஃபார் எண்டர்பிரைஸ் இன் இன்னோவேஷன் விருது வழங்கும் நிகழ்ச்சியில், மன்னர் சார்ள்ஸ் III-யுடன் உரையாடுகிறார் சபேசன் சிதம்பரநாதன்.

பின்னோக்கிப் பார்க்கையில், இலங்கையில் நடைபெற்ற போரானது, அதனால் கிடைத்த அனுபவமானது, எனது குணாதிசயத்தை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகித்தது. துன்பமான சூழ்நிலையில் ஏற்பட்ட இந்த குணாதிசயங்கள், எனது வாழ்க்கையில் பின்னாளிலும் தொடர்ந்தன. அந்த அனுபவமானது, என்னுள் ஒருவித துணிச்சலையும் ஏற்படுத்தியது. சவால்களை எதிர்கொள்ளும் திறனையும் அளித்தது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்திருந்தால், எனது வாழ்க்கை நேரான வழியில் சென்றிருக்கும். அரசு வேலையுடன் நான் யாழ்ப்பாணத்தில் வசித்திருப்பேன். இருப்பினும், அபாயங்கள் நிறைந்த, நிச்சயமற்ற தன்மைகளைக் கொண்ட வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தேன். உதாரணமாக, நான் இங்கிலாந்துக்கு வந்தபோது, ஆங்கில மொழி எனக்கு சரளமாகத் தெரியாது. ஆனால், போரின்போது எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் போலவே, இந்த மொழிப் பிரச்சினையையும் ஒரு சவாலாகத்தான் பார்த்தேன், பின்னடைவாக அல்ல. போர் காலங்களில் நான் வளர்த்துக்கொண்ட நெகிழ்ச்சித்தன்மையானது, (விரிவாற்றால்) விலை மதிப்பற்றது. இது துன்பங்களை நேருக்கு நேர் எதிர்கொள்ள எனக்குக் கற்றுத்

தந்தது. இந்த மனப்போக்கு புதிய சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் திறனில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**யாழ்ப்பாண மக்களை மேம்படுத்து வதற்கு தற்போது தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்ன? இதற்காக தாங்கள் துவங்கியுள்ள அல்லது துவங்கப் போகும் திட்டங்கள் குறித்து விரிவாகக் கூற முடியுமா?**

நான் தற்போது யாழ்ப்பாணத்தில் இரண்டு முக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளேன். முதலாவது முயற்சி, 'உங்கள் திறமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் மற்றும் சாதனை புரிதல்' என்பதாகும். ஒவ்வொரு குழந்தையும் உள்ளார்ந்த திறமைகளுடன் பிறக்கிறது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இதில் தெய்வம் யாருக்கும் குறை வைத்ததாக நான் நினைக்கவில்லை. இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால், பல குழந்தைகளுக்கு தங்களது திறமைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தவும், அவற்றை மேம்படுத்தவும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இதில், 1 சதவிகிதம் பேர் அதிர்ஷ்டசாலியாக இருப்பர். தற்செயலாக அல்லது வழிகாட்டுதலால், அவர்களின் திறமையை முன்கூட்டியே உணர்ந்து, அதை செயல்படுத்தி, சாதனை புரிவார்கள்.

இருப்பினும், மற்றவர்கள் இதேபோன்ற சாதனைகளை புரிய மாட்டார்கள் என்று அர்த்தமில்லை. ஸ்டீவ் ஜாப்ஸ், சர் ஐசக் நியூட்டன், பில் கேட்ஸ் உள்ளிட்ட சாதனையாளர்கள் பலர், தங்களுக்குள்ள திறமையை ஆரம்பநிலையிலேயே கண்டறிந்தனர். இது அவர்களின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணியாக இருந்தது. இளம் வயதிலேயே மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சியை இலங்கையில் தொடங்கியுள்ளேன்.

எனது இரண்டாவது திட்டம், ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு வழிகாட்டுவது. இந்த முயற்சியானது, யாழ்ப்பாணம் பல்கலைக்கழத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. புதுமையான யோசனைகள் அல்லது கண்டுபிடிப்புகளைக் கொண்ட தனி நபர்கள் பலர் இருப்பர். ஆனால், வணிக ரீதியில் அந்த கண்டுபிடிப்புகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பர். அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். அத்தகையோருக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம், அவர்களை சிறந்த தொழில்முனைவோராக உருவாக்க முடியும் என்பது எங்களது நம்பிக்கை.



தொழில்முனைவோரை உருவாக்கும் ஒரு மையமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் விளங்க வேண்டும் என்பதே எனது தொலைநோக்குப் பார்வையாகும். புதுமை கலாச்சாரத்தை பின்பற்றுவது மற்றும் முன்னணி பல்கலைக்கழகங்களான கேம்பிரிட்ஜ் மற்றும் ஹார்வர்டு ஆகியவை செய்துவருவதுபோல, நிறுவனங்களை மேம்படுத்தும் பணியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஈடுபட வேண்டும் என்பது. இந்த முயற்சிகள் மூலம், யாழ்ப்பாண மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு எனது பங்களிப்பு நிச்சயம் இருக்கும் என்று நம்புகிறேன் என்றார் சபேசன் சிதம்பரநாதன்.

“நோக்கு”, தமிழில் ஒரு புது முயற்சி. நேர்மையான தமிழ் இதழியலை கொண்டுவர வேண்டும் என்ற ஆவலில் இந்த இதழை தொடங்கியுள்ளோம். காத்திரமான, ஆழமான கட்டுரைகள் இந்த இதழில் வெளியிடப்படும்.
Jaffna Monitor- இதழில் வெளியாகும் கட்டுரைகளின் தமிழ் வடிவம், இந்த இதழுக்காக எழுதப்படும் பிரத்தியேகமான கட்டுரைகளும் “நோக்”கில் இடம்பெறும்.

தொடர்பு : jaffnamonitortamil@gmail.com